இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 372
சனி, 03 ஜனவரி, 2026 |
பக்கங்கள் 17
www.ilakku.org

சிறிலங்கா ஈழத்தமிழினத்தின் மேல் பண்பாட்டு இனவழிப்பை யாழ்ப்பாண உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டில் 11 பேரின் இனப்படுகொலையுடன் தொடங்கிய 52வது நினைவேந்தல் ஆண்டு 10.01.2026 இல் ஈழத்தமிழர் தாயகத்திலும் ஈழத்தமிழர் புலம்பதிந்து வாழும் அனைத்துலக நாடுகளிலும் நினைவுகூரப்படுகிறது. இதற்கான எதிர்வினையாகவே ஈழத்தமிழர் தேசிய விடுதலைப் போராட்டம் ஈழத்தமிழ் மக்களின் ஆயுத எதிர்ப்பாக ஆரம்பமாகியது வரலாறு.



# 2026 சவால்கள் மட்டுமல்ல ஆபத்துக்களுநம் நிறைந்தது

விதுரன்



மலையகக் கல்விப் பாதையில் இயற்கை அனர்த்தங்களும் கொள்கை முரண்பாடுகளும்:
**ஓர் அபாய எச்சரிக்கை**
மருதன் ராம்



2025ம் ஆண்டில் உலகம் சந்தித்த
**மிக முக்கிய 10 நிகழ்வுகள்**
தமிழில்: ஜெயந்திரன்



# 2026 ஆம் ஆண்டில் உலகம் புறக்கணிக்க முடியாத நெருக்கடிகள்

வேல்ஸில் இருந்து அருஸ்

# தையிட்டி: திஸ்ஸ விகாரை கட்டியமை மகா தவறு: நாக தீப விகாராதிபதி அதிருப்தி



தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு சொந்தமான காணி இருக்கும் போது, தமிழ் மக்களின் காணிகளை அடாத்தாக கையகப்படுத்தி இராணுவத்தினருடன் இணைந்து விகாரை கட்டி யமை மகா தவறு.

அதனை பௌத்த துறவி செய்திருக்க கூடாது என நயினாதீவு நாக விகாரை விகாராதிபதி ஸ்ரீ நவடகல பதும கீர்த்தி திஸ்ஸ தெரிவித்துள்ளார். நாக தீப விகாராதிபதி தலைமையிலான பௌத்த பிக்குகள் அடங்கிய குழுவினர் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை தையிட்டி விகாரை அமைந்துள்ள பகுதிக்கு நேரில் சென்று, தையிட்டி விகாரைக்காக காணிகளை இழந்தவர்களை சந்தித்து கலந்துரையாடியதுடன், திஸ்ஸ விகாரை முன்னர் இருந்த இடத்தினையும் , திஸ்ஸ விகாரைக்கு சொந்தமான காணிகளையும் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.
இது குறித்து தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், தையிட்டி திஸ்ஸ விகாரை இப்போது அமைந்துள்ள பகுதி தனியாருக்கு சொந்தமான காணிகள். திஸ்ஸ விகாரைக்கு என சொந்தமாக காணிகள் இருக்கும் போது இராணுவத்தினருடன் இணைந்து தனியார் காணிகளை அபகரித்து விகாரையை கட்டியுள்ளனர்.

இது மகா தவறு, பௌத்த பிக்குகள் அவ்வாறு செய்திருக்க கூடாது. மற்றவர்களுக்கு போதனை செய்யும் நாங்கள் , பிறர் பொருட்களை எடுக்க கூடாது என புத்தரே சொல்லி இருக்கிறார். தற்போது விகாரைக்காக கையகப்படுத்தியுள்ள காணிகளை நான்கு கட்டமாக விடுவிப்பதாக கூறி இருப்பதும் ஏமாற்று வேலையே. நான்கு கட்டம் என கூறுவார்கள்.

பிறகு ஒவ்வொரு கட்டத்திற்கு இடையில் நான்கு ஐந்து வருடங்களுக்கு மேலாகும். எனவே விடுவிப்பதனை ஒரு தடவையில் தர வேண்டும்

தொடர்ச்சி: பக்கம் 14

# டிட்வா புயல்-ஒரு மாதம் கடந்த போதும் விடிவில்லை: பாதிக்கப்பட்ட மக்கள் கவலை



டிட்வா பேரழிவு ஏற்பட்டு ஒரு மாதத்திற்கும் மேலாகியும், 24,000 க்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து, நாட்டின் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கூடாரங்களில் வசித்து வருகின்றனர்.

அதே நேரத்தில், நாடு புத்தாண்டை வரவேற்றது. நாட்டின் பிற பகுதிகள் புத்தாண்டுக் கொண்டாட்டங்களுடன் கொண்டாடினாலும், பாதிக்கப்பட்ட பல குடும்பங்கள் நிரந்தர தங்குமிடம் இல்லாமல் அன்றாட கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

பேரிடருக்குப் பிறகு உடனடியாக உதவ மக்களும் அமைப்புகளும் முன்வந்தாலும் எதுவும் இன்னும் சரியாக நடக்கவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் கூறுகிறார்கள். வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குவதாக அதிகாரிகள் உறுதியளித்த போதிலும், ஹட்டன் உட்பட மிக மோசமாக பாதிக்கப்பட்ட சில பகுதிகளில் வசிப்பவர்கள்,

தொடர்ச்சி: பக்கம் 14

# அவசரகாலநிலை பிரகடனம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கரிசனை

அத்தியாவசிய சேவைகள் தொடர்ந்து முன்னெடுக்கபடுவதற்கு அவசரகால நிலை பிரகடனம் தொடர்வது அவசியம் என நியாயப்படுத்த முடிந்தாலும், அதில் உள்வாங்கப்பட்டுள்ள சில வழிகாட்டல்கள் கேள்விக்கு உட்படுத்தப்படவேண்டியவையாகவே உள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு தெரிவிள்ளது.

அவை குறித்து தங்களது தரப்பு ஜனாதிபதிக்குக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியிருந்த போதிலும், காலநீடிப்பு செய்யப்பட்டுள்ள அவசரகாலநிலை பிரகடனத்தில் தங்களின் அவதானிப்புக்கள் உள்வாங்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கரிசனை வெளியிட்டுள்ளது.

'டிட்வா' சூறாவளியை அடுத்து உருவான வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு போன்றவற்றால் நாட்டில் ஏற்பட்ட பேரனர்த்த சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு கடந்த நவம்பர் மாதம் 28ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் அவசரகாலநிலை

தொடர்ச்சி: பக்கம் 14

# நத்தார் விடுமுறை வங்கிக் கொள்ளை - 35 மில்லியன் டொலர்கள் இழப்பு



ஹொலிவூட் படங்களின் பாவனையில் ஜேர்மனியில் உள்ள வங்கி ஒன்றின் சுவரில் துளைபோட்டு இரகசியமாக உள்நுளைந்த திருடர் கூட்டம் கிறிஸ்துமஸ் பண்டிகையின் போது ஸ்பார்க்காஸ் வங்கியின் பெட்டகத்தை உடைத்து, 95% வாடிக்கையாளர்களின் பாதுகாப்பு வைப்பு பெட்டிகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

திருடர்கள் கவனமாக திட்டமிடப்பட்ட ஒரு கொள்ளையைச் செய்து, கிறிஸ்துமஸ் விடுமுறை நாட்களில் கெல் சென்கிர்ச்சனில் உள்ள ஒரு சேமிப்பு வங்கி பெட்டகத்திலிருந்து மதிப்பிடப்பட்ட $35 மில்லியன் (€30 மில்லியன்) ரொக்கம் மற்றும் மதிப்புமிக்க தங்கம் மற்றும் வைரம் போன்ற பொருட்களைக் கொள்ளை அடித்ததாக காவல்துறை தெரிவித்துள்ளது.

ஸ்பார்க்காஸ் சேமிப்பு வங்கியில் சனிக்கிழமை மாலைக்கும் திங்கள் காலைக்கும் இடையில் திருட்டு நடந்துள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். அதாவது திருட்டு நடந்தது கூட அவர்களுக்கு உடனடியாக தெரியவில்லை. பெட்டகத்தை அணுகுவதற்காக ஒரு தடிப்பான கான்கிரீட் சுவரைத் துளைத்து, பின்னர் 3,000 க்கும் மேற்பட்ட பாதுகாப்பு வைப்பு பெட்டிகளை வலுக்கட்டாயமாகத் திறந்த திருடர்கள், சுமார் 2,700 வாடிக்கையாளர்களின் பணம் மற்றும் பொருட்களை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

வார இறுதியில் அருகிலுள்ள பார்க்கிங் கேரேஜ் வழியாக பலர் பெரிய பைகளை எடுத்துச் செல்வதைக் கண்டதாக சாட்சிகள் தெரிவித்தனர், அதே நேரத்தில் திங்கள் கிழமை அதிகாலை முகமூடி அணிந்தவர்களுடன் ஒரு கருப்பு Audi SUV கார் வேகமாகச் செல்வதை பாதுகாப்பு கமராக்கள் படம்பிடித்துள்ளன.

1,1 மீட்டர் தடிப்பமான வலுவூட்டப்பட்ட கான்கிரீட் எவ்வாறு சத்தமின்றி உடைக்கப்பட்டது என்ற கேள்விகளும் எழுந்துள்ளன. 30 மில்லியன் என்பது வங்கி

தொடர்ச்சி: பக்கம் 14

# மக்களுக்கு இராணுவப் பயிற்சி அழிக்கும் இந்தியா



இந்திய இராணுவம் ஜம்மு-காஷ்மீரின் தோடாவில் கிராம பாதுகாப்பு காவலர்களுக்கு பயிற்சி அளிக்கத் தொடங்கியுள்ளது, உள்ளூர் பாதுகாப்பை அதிகரிக்க ஆயுதங்களைக் கையாளுதல் மற்றும் தற்காப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது என இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி: பக்கம் 15

# தங்கத்திற்காக நடக்கும் சூடான் போர்



2025 ஆம் ஆண்டில் 70 டன் தங்கத்தை சூடான் உற்பத்தி செய்து, அதன் வருடாந்திர உற்பத்தி இலக்கை தாண்டிவிட்டதாக சூடான் கனிமவள நிறுவனம் (SMRC) இந்த வாரம் தெரிவித்துள்ளது.

அரசுக்கு சொந்தமான நிறுவனம் தங்க உற்பத்தி ஆண்டுக்கான திட்டமிடப்பட்ட இலக்கில் 113% ஐ எட்டியுள்ளது, இது "கடந்த ஐந்து ஆண்டுகளில் மிக உயர்ந்த உற்பத்தி அளவை" குறிக்கிறது. 2025 ஆம் ஆண்டில் மொத்த பொது வருவாய் 1.087 டிரில்லியன்

தொடர்ச்சி: பக்கம் 14

# இந்திய பாகிஸ்தான் போரை நிறுத்த உதவியதாக சீனா தெரிவிப்பு



மே மாதத்தில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நான்கு நாள் இராணுவ மோதலின் போது பெய்ஜிங் மத்தியஸ்தம் செய்ததாக 'சர்வதேச சூழ்நிலை மற்றும் சீனாவின் வெளியுறவு' என்ற தலைப்பிலான ஒரு கருத்தரங்கில் பேசிய சீன வெளியுறவு அமைச்சர் வாங்யி செவ்வாயன்று (30) தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு மற்றும் தென் கிழக்கு ஆசியாவில் மோதல்களை மத்தியஸ்தம் செய்வதில் பெய்ஜிங்கின் பங்கையும் நினைவு கூர்ந்தார் என்று பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நீடித்த அமைதியைக் கட்டியெழுப்ப, நாங்கள் ஒரு புறநிலை மற்றும் நியாயமான

தொடர்ச்சி: பக்கம் 14

 | © 2026 இலக்கு இணையம்

## ஆசிரியர் தலையங்கம் | சனி, 03 ஜனவரி, 2026

# ஈழத்தமிழர் இறைமையை அழிக்க ஒரே நாடு 2 அமைப்புக்கள் என்ற சீனக்கொள்கை வழித் தீர்வினை சிறிலங்கா முயற்சிக்கிறதா?

தாய்வான் நாட்டை தன்னுடைய ஆட்சிக்குட்பட்டதாகவே என்றும் கருதும் சீனா, தாய்வான் தீவைச் சுற்றியுள்ள கடலில் போர்ப்பயிற்சிகளை நவீன போர்க்கப்பல்கள் போர்விமானங்களுடன் நிழல் யுத்தம் போலவே கடந்த வாரத்தில் நடத்தி முடித்த நிலையில் 2026ம் ஆண்டு பிறந்துள்ளது. இந்நிலையில் சீனாவின் அரசத்தலைவர் ஷிஜின்பிங் இந்தப் போர்ப்பயிற்சி நிறைவு மற்றும் புத்தாண்டுச் செய்தியினை வழங்குகையில் " நமது அன்னை பூமியை மீள இணைக்கும் இந்தப் பணியை தடுத்து நிறுத்த முடியாது" எனத் தெளிவாக உலகுக்கு எடுத்துரைத்துள்ளார். மேலும், "ஒரே நாடு 2 அமைப்புக்கள் என்ற கொள்கையை நாம் நடைமுறைப்படுத்தியே ஆக வேண்டும். ஹொங்கொங் மற்றும் மக்காவ் ஆகியவற்றை நமது நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்காக ஒன்றிணைக்க ஆதரவு அளிக்க வேண்டும். அவற்றுடன் நீண்டகால வளம் மற்றும் உறுதித்தன்மை ஆகியவற்றையும் தொடர்ந்து பேண வேண்டும்" என்னும் கருத்துக்களையும் சீன அரசத்தலைவர் வெளிப்படையாக உலகிற்கு அவருடைய செய்தியில் தெளிவாக்கியுள்ளார்.

சீனத்தலைவரின் இந்தச் செய்தியை நுணுக்கமாக எடுத்து நோக்கின் சீனச் சிந்தனை வழி தனது அரசியல் கொள்கைகளை உருவாக்கி வளர்ந்து இன்று சிறிலங்காவின் ஆட்சித் தலைமையாக உள்ள தேசிய மக்கள் சக்தி இலங்கைத் தீவினை ஒரே நாடாக மக்களிடை அழுத்தப்படுத்துவதும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் என்னும் அமைப்புக்களாக ஈழத்தமிழரிடம் இருந்து பிரித்தானிய காலனித்துவம் கைப்பற்றிய யாழ்ப்பாண வன்னி அரசுக்களின் நிலங்களை அவை ஈழத்தமிழரின் இறைமையுள்ள நிலப்பரப்புக்கள் என்ற வரலாற்று உண்மைக்கு மாறாக வடக்கு கிழக்கு மாகாண செயற்திட்ட பகுதியாக பேசி வருவதும் சீனாவின் ஒரே நாடு இரு அமைப்புக்கள் என்ற கோட்பாட்டினை தேசிய மக்கள் சக்தி ஈழத்தமிழரின் தேசிய பிரச்சினைக்கான தீர்வாகப் புதிய அரசியலமைப்பில் கட்டமைக்க முயல்கிறதா? என்ற கேள்வியை எழுப்புகிறது.

சிறிலங்காவின் முன்னைய சிங்கள அரசாங்கங்கள் எல்லாமே இது எங்கள் நாடு (அபே ரட்ட) – சிங்களவர்களுக்கே உரிய நாடு ( அபே ஜாதிய) – பௌத்த ஆகம ஆட்சிக்குரிய நாடு (அபே ஆகமய) என்ற சிங்கள பௌத்த பேரினவாத சிந்தனை வழி 1956 முதல் கடந்த 70 ஆண்டுகளாக இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாகத் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் இன்று வரை வாழ்ந்து வரும் ஈழத்தமிழரின் வரலாற்றுத் தாயகத்தை மறுக்கும் மறைக்கும் அரசியல் கொள்கை கோட்பாடுகளையே முன்னெடுத்து வருவதன் தொடர்ச்சியாகவே தேசிய மக்கள் சக்தியும் தனது புதிய அரசியலமைப்பை உருவாக்கி வருகின்றது என்பதை உணர்ந்து ஈழத்தமிழர்கள் அரசியல் விழிப்புணர்வு பெற வேண்டும் என்பதற்கே இன்றைய அதன் ஒரே நாடு ஒரே மக்கள் கோட்பாடு என்பது சீனச்சாயம் பூசிய பழைய கோட்பாடே என்பதை இலக்கு இங்கு கட்டுடைப்புச் செய்ய வேண்டிய தேவை எற்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் அவசர நிவாரண இணைப்பாளர் டொம் பிளட்சர் அவர்கள் அமெரிக்கா மனிதாபிமான தேவைகளை இராஜதந்திரத்துடனும் சமாதானத்தை உருவாக்குவதுடனும் இணைக்கும் ஆண்டாக 2026 ஐக் கட்டமைத்துள்ளது என்று கூறியதை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கைத் தீவில் அண்மையில் ஏற்பட்ட இயற்கையின் பேரிடரையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதற்கான வகையில் பலாலியில் விமானங்கள் மூலம் நிவாரணப் பொருட்களையும் கட்டுமானப் பொருட்களையும் வழங்கியது. இதனால் தமிழர் தாயகப் பகுதிகளிலும் அமெரிக்க வழங்கலால் நன்மைகள் ஏற்பட்டன. இவற்றைக் கவனத்தில் எடுத்த தமிழர் தாயகக் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்துத் தமிழ்த்தாய்மார் வவுனியாவில் தங்களது 3237வது நாள் அவர்களது சுழற்சிமுறை உணவுத் தவிர்ப்புப் போராட்டத்துக்கு 01.01. 2026 இல் அமைந்த வரலாற்று நிலையில் நடாத்திய போராட்டத்தின் போது விடுத்த புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் அமெரிக்காவுக்கு தாங்களே நன்றி தெரிவிப்பதாகவும் எந்தத் தமிழ் அரசியல் கட்சியோ அல்லது சிவில் சமுகச் செயற்பாட்டாளரோ அமெரிக்காவுக்கு நன்றி தெரிவிக்கவில்லை எனக் கூறியுள்ளனர்.

அத்துடன் " இத்தியாகம் மற்றும் மன உறுதி நிறைந்த இடத்திலிருந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்களின் பிள்ளைகள் குறித்த உண்மைகளை வெளிக்கொண்டு வர உதவுமாறும் தமிழ் மக்களுக்கு எதிராகத் தொடரும் இனப்படுகொலையை நிறுத்தி இறைமையை மீட்டெடுக்க ஆதரவு அளிக்குமாறும் அமெரிக்காவையும் ஐரோப்பிய ஒன்றியத்தையும் தொடர்ந்து கேட்டுக்கொள்கின்றோம்" எனவும் அந்தத் தமிழ்த்தாய்மார் எவ்வாறு தாயகத்திலும் அனைத்துலக நாடுகளிலும் புலம்பதிந்து வாழும் ஈழத்தமிழர்கள் அரசியல் செய்ய வேண்டுமென்பதையும் தெளிவுபடுத்தியுள்ளனர். மேலும் "நாங்கள் அரசியல்வாதிகளல்ல . மாறாக உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறலைக் கோரும் தாய்மார்களாகவே இந்தத் தார்மீக அடிப்படையில் பேசுகின்றோம்" என அவர்கள் தங்களுக்கு எங்கிருந்து பேசுவதற்கான ஆணை வருகிறது என்பதையும் தெளிவாக்கியுள்ளனர்.

அத்துடன் "இந்தத் தீவில் தமிழர்களின் இருப்பு, பிற்கால அனைத்து அரசியல் மற்றும் இனக்கட்டுமானங்களுக்கும் முந்தியது ஆயினும் சமகாலத் தமிழ்த் தலைவர்கள் பலர் இந்த எதார்த்தத்தைப் புறக்கணித்து அதற்குப் பதிலாக தனிப்பட்ட வசதி, வெளியமுத்தங்கள், அல்லது மேட்டுக்குடி நலன்களில் வேரூன்றிய அரசியல் சூத்திரங்களை ஊக்குவிக்கின்றனர்" எனப் பேசி இலக்கு எதனை மக்கள் முன்வைக்க விரும்புகிறதோ அதனையே மக்கள் செய்கிறார்கள் - செய்வார்கள் என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். கூடவே ஈழத்தமிழர்கள் உறுதியுடன் உறைவிடம் விழ விழ எழும் மரணமற்ற மனித குலம் என்பதை உறுதிப்படுத்தம் வகையில் அந்தத் தாய்மார் " ஈழத்திலும் உலகத் தமிழ் புலம்பெயர் அனைத்து தமிழர்களுக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தமது பதாகையின் வழி தெரிவித்துள்ளதைப் பார்க்கையில் " வீரம் தருவது தாய் முலைப்பாலடா" என்ற மகாகவி பாரதியின் வார்த்தைகள் மீள்நினைவாகின.

அதே வேளை மக்களின் அரசியல் செயற்பாட்டாளர்களிடம் இருந்தும் மக்களின் குரல்கள் ஒலிக்கும் ஆண்டாக 2026 அமையும் என்பதற்குக் கட்டியம் கூறுவது போல மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் தன்னுடைய புத்தாண்டுச் செய்தியில் " தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை – வலிந்து காணமால் ஆக்கப்பட்டோரின் கிட்டிய குடும்ப உறுப்பினர்களுக்குத் தீர்வு – மற்றும் மாகாணசபை தேர்தலை நடாத்தி குறைந்த பட்ச அதிகாரத்தையாவது அரசியலமைப்பு வழி தாருங்கள்" எனக் கோரியுள்ளமை அமைகிறது. சிவில் சமுக அமைப்புக்களும் விழிப்புணர்வு கொண்டெழுவதற்கு உதாரணமாக மன்னார் கத்தோலிக்க ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் அவர்களது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியும் " அமைதி, நீதி, நம்பிக்கை, உண்மை, அன்புநிலை வாழ்வு என்பன புத்தாண்டில் மீள உழைக்க" அழைப்பு விடுத்துள்ளது.

கூடவே கடந்த மாத பேரிடரில் இருந்து மீண்டெழ ஒருவர் ஒருவருக்கு உதவிய அதே உளவியல் நிலை நாளாந்த வாழ்வாக வேண்டும்" எனவும் ஆயர் தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார். மேலும் 61 சிவில் சமுக அமைப்பினர் கத்தோலிக்க மற்றும் திருச்சபைக் கிறிஸ்தவக் குருக்கள் தலைவர்கள் உட்பட "அரசைப் பாதுகாத்தல்" என்ற மையப்பொருளில் புதிய சட்டம் பழைய பயங்கரவாத தடைச்சட்டத்தை விட பலவழிகளில் மிக மோசமாக உள்ளதை உலகிற்கு அறிக்கை மூலம் வெளிப்படுத்தியமையும் சிவில் சமுகங்களின் வலிமை பெருகுவதை உணர்த்துகிறது. அத்துடன் " வடபகுதியின் இருபெரும் மூத்த விகாரதிபதிகளும் தையிட்டி திஸ்ஸ விகாரை தொடர்பில் வெளிப்படுத்தியுள்ள உண்மைகளை அநுரகுமார உட்பட அனைவரும் கவனத்தில் எடுக்க வேண்டும்" என தமிழ்த்தேசியப் பணிச் சபையின் தலைவர் முனைவர் குமாரகுருபரன் விடுத்துள்ள அறிக்கையும் ஈழத்தமிழரின் சிவில் சமூக அமைப்புக்கள் பொதுக்கோரிக்கைகளை முன்வைப்பதில் ஒருமைப்பாட்டுடன் செயற்படத் தொடங்கி விட்டதை வெளிப்படுத்துகின்றன.

இந்நேரத்தில் அனைத்துலக அரசியலிலும் மனிதாய தேவைகள் இராஜதந்திரத்துடனும் சமாதானத்தை உருவாக்கலுடனும் இணைக்கப்பட்ட ஆண்டாக அமெரிக்காவால் 2026ஐ மாற்றியுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் அவசர நிவாரண இணைப்பாளர் டொம் பிளட்சர் தெரிவித்துள்ளமை தாயகத்திலும் உலகெங்கும் உள்ள ஈழத்தமிழர்கள் இராஜதந்திரத்துடனும் சமாதான உருவாக்கல் மூலமும் தங்கள் தாயகத்தின் இறைமையையும் மக்களின் சுயநிர்ணய உரிமையையும் இந்த ஆண்டில் முன்னெடுப்பதற்கான உரையாடல்கள் கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளை வேகமாக முன்னெடுக்க வேண்டும். இரஸ்யா நிலவில் 2036க்குள் அணுநிலையமைக்கவும் சீனாவுடன் இணைந்து நிலவில் ஆய்வுமையம் அமைக்கவும் திட்டமிடுவது ஈழத்தமிழர்களுக்கு பிரச்சினைகளுக்கு நடுவிலும் எவ்வாறு நீண்டகால திட்டங்களை குறுங்காலத் திட்டங்களை வகுக்க வேண்டுமென்பதற்கு முன்னுதாரணமாக அமைகிறது என்பது இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது.

**ஆசிரியர்**

# திருகோணமலை 5 மாணவர்கள் படுகொலை : 20ஆவது நினைவேந்தல்



திருகோணமலை கடற்கரையில் வைத்து படுகொலை செய்யப்பட்ட 5 மாணவர்களின் 20 ஆவது நினைவேந்தல் நிகழ்வு வெள்ளிக்கிழமை அவர்கள் படுகொலை செய்யப்பட்ட திருகோணமலை கடற்கரையில் உள்ள காந்தி சிலைக்கு முன்பாக இடம்பெற்றது. இதன்போது படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் நிழற்படங்களுக்கு மலர்தூவி, விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

திருகோணமலை பிரதான கடற்கரைச் சந்தியிலுள்ள காந்தி சிலைக்கு அருகாமையில் மாலைப் பொழுதில் தினமும் இளைஞர்கள் நின்று கதைப்பது வழக்கம். 02.01.2006 அன்றைய மாலைப் பொழுதும் மாணவர்கள் பலர் அவ்விடத்தில் கூடி இருந்தனர். அப்போது ஆட்டோ ஒன்றில் வந்த இனம் தெரியாத நபர்கள் அந்த இளைஞர்கள் மீது கைக்குண்டை வீசிவிட்டுக் கோட்டைப் பக்கமாகச் சென்றனர்.

கைக்குண்டு வெடித்ததில் திருமலை புனிதஜோசப் கல்லூரி மாணவரான யோகராஜா பூங்குழலோன் என்பவர் காயமடைந்தார். இவரை ஏனைய மாணவர்கள் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முற்பட்டபோது அப்பகுதிக்கு வந்த கடற்படையினர் அங்கு சுமார் 10 நிமிடங்கள் வரை துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் கடற்கரையில் நின்ற மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடத்தொடங்கினர். இதற்கிடையில் காயமடைந்த மாணவர்களுக்கு அருகில் விரைந்த கடற்படையினர் அவர்களை நிலத்தில் விழுத்தி கண்மூடித்தனமாகத் தாக்கினர். மாணவர்கள் இச்சம்பவம் பற்றி தமக்கு ஏதும் தெரியாது எனக் கூறியபோதும் மாணவர்களைச் சப்பாத்துக் கால்களால் மிதித்து முழங்காலில் நிக்க வைத்து சுட்டுக் கொன்றதாக அக்காலத்தில் வெளிவந்த பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

இத்தகைய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் லோகிதராசா ரொகான், சண்முகராஜா சஜீந்திரன், மனோகரன் வசீகர், தங்கத்துரை சிவானந்தன், யோகராஜா கேமச்சந்திரன் ஆகியோர் கொல்லப்பட்டிருந்தனர். அத்துடன் குறித்த படுகொலைச் சம்பவம் தொடர்பில் செய்தி வெளியிட்டிருந்த சுகிர்தராஜன் என்ற ஊடகவியலாளரும் படுகொலை செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



# 2026 சவால்கள் மட்டுமல்ல ஆபத்துக்களநம் நிறைந்தது

விதுரன்

2026ஆம் ஆண்டு இலங்கையைப் பொறுத்தவரை வெறும் நாட்காட்டி மாற்றமல்ல பொதுப்படையில் அதுவொரு தேசத்தின் எதிர்காலம் குறித்த மிக வரலாற்று மைல் கற்கள் நிறைந்ததாகும். தமிழர்களைப் பொறுத்தவரையில் அபிலாசைகளை அடைவதற்கான 7தசாப்தப் பயணம் நீளப்போகின்றமைக்கு அப்பால் அன்றாட வாழ்க்கையில் தற்காப்பு போராட்டங்களுக்கு தள்ளப்படும் நிலைமைகள் தீவிரமாகப்போகின்றன.



2022இல் ஏற்பட்ட பொருளாதார வங்குரோத்தினால் ஏற்பட்ட வடுக்கள் ஆறாமல் இருக்கின்றது. 2023இல் அரகல மக்கள் எழுச்சியின் ஏக்கங்கள் நிறைவேறாது நீடிக்கின்றன. 2024 இல் முறைமை மாற்றதை நோக்கிய திரண்ட அரசியல் மாற்றமும் புதிய நம்பிக்கையும் மெல்ல மெல்ல கலைய ஆரம்பித்திருக்கின்றது. 2025இன் இறுதியில் 'தித்வா' புயல் ஏற்படுத்திய பேரழிவு புதிய நெருக்கடிகளை தோற்று வித்திருக்கின்றன.



இந்தச் சூழலானது இலங்கையில் 'நிச்சயமற்ற நிலைத்தன்மையை' ஏற்படுத்தியுள்ளது. தற்போதைய சூழலில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனது இரண்டாவது ஆண்டில் பயணத்தை ஆரம்பிக்கிறது. அந்த அரசாங்கத்தின் மீதான அதியுச்ச எதிர்பார்ப்பாக இருக்கும் 'முறைமை மாற்றம்' என்ற கோசத்தை நடைமுறைச் சாத்தியமாக்குவதாக இருந்தால் இந்த ஆண்டில் நிர்வாக மாற்றம் ஏற்பட வேண்டிய கட்டாய சூழல் உருவெடுத்திருக்கிறது.

அந்த வகையில் பார்க்கின்றபோது அநுர அரசாங்கத்துக்கு நிர்வாக மாற்றம் என்பது அரசியல் ரீதியான அக்னிப் பரீட்சையாக இருக்கப்போகிறது. அதுமட்டுமன்றி ஜே.வி.பி. தலைமையில் செயற்படும் இந்த அரசாங்கத்திற்கு போராட்ட இயக்கத்திலிருந்து முதிர்ந்த நிர்வாக அமைப்பாக மாறுவதற்கான இறுதிச் சந்தர்ப்பமாகவும் இது அமையப் போகிற்து.

ஆட்சியாளர்களுக்கு ஆட்சிப்பீடத்தில் அமர்ந்த ஆரம்பகாலத்தில் இருந்த ஊழல் எதிர்ப்புக்கான சிந்தனைகள் இப்போது மெல்லமெல்லத் தணிந்து விட்டது. அவ்வப்போது நடைபெறுகின்ற கைதுகள் வெறுமனே திசை திருப்பல்களுக்காகவும், பழிவாங்கல்களுக்காகவும் என்ற பார்வை மக்கள் மத்தியில் வேரூன்ற ஆரம்பித்துள்ளது.

அதுமட்டுமன்றி, ஆளும் தேசிய மக்கள் சக்தியின் அங்கத்தவர்கள் இலங்கையின் வழக்கமான அரசியல் கலாசாரத்துக்குள் கரைந்துவிடுகின்ற போக்கு வெளிப்பட ஆரம்பித்திருக்கின்றது. இதனால் இலஞ்சம், ஊழல்கள் ஆகியவற்றுக்கு எதிரான செயற்பாடுகளை கடந்த ஆட்சியாளர்களுக்கு எதிராக எடுப்பதற்கு முன்னதாக தங்களுடைய சகபாடிகளை கட்டுப்படுத்த வேண்டிய கடினமான சூழலொன்று புதிய ஆண்டில் தோன்றியுள்ளது.



தென்னிலங்கையின் சிங்களக் கிராமப்புறங்களிலும், வடக்கு-கிழக்கின் சிறுபான்மைச் சமூகங்களிலும் தேசிய மக்கள் சக்தியின் 'கிளீன் சிறிலங்கா' 'பிரஜா சக்தி' போன்ற திட்டங்களின் ஊடாக நடைபெறுகின்ற ஜே.வி.பியை கீழ் மட்டத்துக்கு ஊருவச் செய்யும் அல்லது கட்சிக் கட்டமைப்பை விரிவுபடுத்தும் செயற்பாடுகள் இந்த ஆண்டில் அதியுச்சமடையும் நிலைமைகளே காணப்படுகின்றன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது தொடர்பான விவாதங்கள் அரசியல் தளத்தில் முக்கிய பேசுபொருளாக அமையப்போகின்றது. ஏனென்றால் ஒருபுறம் பொருளாதார மீட்சிக்கு வலுவான அதிகாரம் தேவை என்ற வாதமும், மறுபுறம் சர்வாதிகாரத்தைத் தடுக்க அதை ஒழிக்க வேண்டும் என்ற நிலைப்பாடும் 2026 இன் அரசியல் களத்தை மையங்கொள்ளவுள்ளன.

அதேபோன்று, புதிய அரசியலமைப்புக்கான உரையாடல்களும், மாகாண சபைகளுக்கான தேர்தல் பற்றிய வாதப்பிரதிவாதங்களும் மேலெழவுள்ளன. இந்த இரண்டு விடயங்களுமே குறிப்பாக தாயகத்தில் வாழும் தமிழ் மக்களின் எதிர்காலத்தை தீர்மானிப்பவையாக இருக்கின்றன.

மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டும் என்ற தமிழ்க் கட்சிகளின் கோசமானது, அதிகாரப்பகிர்வுடனான தன்னாட்சிக் கோரிக்கைக்கு புதிய சவால்களை தோற்றுவித்துள்ளது. இந்தப் புரிதல் இன்னமும் தமிழ் கட்சிகளுக்கு தெளிவாக ஏற்படாத நிலையில் இந்த ஆண்டிலாவது அதுபற்றிய புரிதல் ஏற்படுமா என்பது எதிர்பார்ப்புக்கள் நிறைந்ததாக உள்ளது.

அதுமட்டுமன்றி, மாகாண சபை தேர்தலையும், புதிய அரசியலமைப்பு உருவாக்கம் ஆகியவற்றை மையப்படுத்தி தமிழ் கட்சிகள் தமக்குள் நடத்துகின்ற முட்டி மோதல்கள் இந்த ஆண்டிலும் தொடரப்போகின்ற நிலையில் தென்னிலங்கையின் சிங்கள, பௌத்த மையவாத அரசியலுக்கு அவை தீனிபோடுவதாகவே இருக்கப்போகிறது.

தாயகத்தைப் பொறுத்தவரையில் உரிமைக்கும் உயிர்வாழ்வுக்கும் இடையிலான போராட்டம் 2026ஆம் ஆண்லும் நீளப்போகின்றது. பாரம்பரிய தமிழ் அரசியலின் அரசியல் கலாசாரங்கள் தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியும், சலிப்பையும் ஏற்படுத்தியுள்ள நிலையில் தமிழ்த் தேசிய சிதைப்பு வேகமாக வளர்ந்து வரும் ஆபத்தான சூழல் உருவெடுக்கப்போகின்றது.

குறிப்பாக, தமிழ் தலைமைகளுக்கும், மக்களுக்கும் இடையிலான உரையாடல் வெளியொன்று உருவாக்கப்பட வேண்டியதும், அன்றாட உயிர்வாழ்வுக்கான உறுதிப்படுத்தலுக்கான பொதுத்தளமொன்றை ஏற்படுத்த வேண்டியதும் இந்த ஆண்டில் மிகவும் முக்கியமான விடயங்களாக உள்ளன.

தமிழ் மக்களின் உரிமைகளுக்கான போராட்டத்துக்கு அப்பால் போரால் பாதிக்கப்பட்ட அம்மக்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பு என்பது ஆக்கிரமிப்புக்கள், அடக்குமுறைகள் என்பனவற்றுக்கு எதிரான முன்னெச்சரிக்கைச் செயற்பாடுகளுடன் அண்மைய காலத்தில் பிணைக்கப்பட்டுள்ள காலநிலை மாற்றத்தல் ஏற்படும் இயற்கை விளைவுகளில் இருந்து மீண்டெழுவதற்கான தாங்குதிறன் ஆகியவற்றை மையப்படுத்தியதாக உள்ளது.



தொடர்கதையாக இருக்கும் காணாமல் போனோர் விவகாரம், தமிழ் அரசியல் கைதிகள், செம்மணி உட்பட மனிதப்புதைகுழிகள் விவகாரம், பௌத்த ஆக்கிரமிப்புக்கள் மற்றும் நில உரிமைப் போராட்டங்கள் இன்னும் முடிவுக்கு வராத நிலையில், கிவுல் ஓயா, மகாவலி மற்றும் பல புதிய திட்டங்களுக்கு எதிராகவும் போராட வேண்டிய சூழல் இந்தாண்டில் உருவெடுக்கப்போகின்றது.

தென்னிலங்கையில், எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவு ரணில் தலைமையிலானதா இல்லை சஜித் தலைமையிலானதா என்ற பனிப்போர் தொடரவுள்ள நிலையில், நாமல் மீண்டும் தலையெடுப்பதற்காக தீவிரமான முயற்சிகளில் ஈடுபடவுள்ளார். அதுமட்டுமன்றி ரணிலின் வியூங்களில் மட்டுமே அதிதீத நம்பிக்கை வைத்துள்ள எதிரணியின் தலைவர்கள் பொருளாதார ரீதியாக ஏற்படப்போகின்ற நெருக்கடிகளை வைத்து அதியுச்ச நன்மைகளை அடையலாம்.

இதேநேரம், பொருளாதார ரீதியாக, இலங்கை ஒரு மெல்லிய நூலிழையில் பயணித்துக் கொண்டிருக்கிறது.

தொடர்ச்சி: பக்கம் 08

# தமிழ் ஆயுத ஒட்டுக்குழு தலைவர்களை அமைச்சர்களாக்கிய சிறிலங்கா ஜனநாயகம்!

பா.அரியநேத்திரன்

தற்போதய தேசிய மக்கள் சக்தி அரசால் ஒட்டுக்குழு தலைவர்களாகவும், அமைச்சர்களாகவும் செயல்பட்ட இரண்டுபேர் கைதாகியுள்ளனர். ஒருவர் மட்டக்களப்பு ரிஎம்வீபி ஒட்டுக்குழு தலைவர் பிள்ளையான் மற்றவர் யாழ்ப்பாணம் ஈபீடிபி ஒட்டுக்குழு தலைவர் டக்ளஸ்.



2006 அக்டோபர் 16 ல் ஜே வி பி கொழும்பு உச்ச நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்து இணைந்த வட கிழக்கு மாகாணசபையை இரண்டாக பிரித்த பின்னர். அவசர அவசமாக 2008ல் கிழக்கு மாகாண சபை தேர்தலை அப்போதைய மகிந்த அரசாங்கம் ஆயுத அச்சுறுத்தலை காட்டி நடத்தியது.

அப்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் ஆயுத ஒட்டுக்குழுவாக இயங்கிய தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியை ஆயுதங்களுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி வெற்றிலைச் சின்னத்தில் வேட்பாளராக நிறுத்தி பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனை முதலைமைச்சராக மகிந்தவால் தெரிவானார்.



2004, மார்ச்சில் விடுதலைப் புலிகளில் இருந்து கருணா பிரிந்தவுடன் கருணா, பிள்ளையான் குழுவுக்கு மகிந்த அரசு ஆயுதங்களை வழங்கி இராணுவத்துணைப்படையாக செயல்பட வைத்தனர். 2004 மார்ச் தொடக்கம் 2009 மே 07 வரை பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி ஆயுதங்களுடன் நடமாட அரசு அனுமதித்ததுடன் 2008 கிழக்கு மாகாணசபை தேர்தலில் ஆயுத பலத்தால் பிள்ளையானை முதலமைச்சராக ஜனாதிபதி மகிந்த நியமித்தார் என்பதே உண்மை.

ஆயதங்களுடன் அந்த தேர்தலில் பிரசாரங்கள் இடம் பெற்றமைக்கான ஆதாரம் 2008 மே 10 ல் கிழக்கு மாகாணசபை தேர்தல் இடம்பெற்று சரியாக ஒருவருடம் கடந்த நிலையில் 2009 மே 07 ம் திகதிதான் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியால் ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டன.



தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு (பிள்ளையான் அணி) தமது வசம் இருந்த ஆயுதங்களை வைபவரீதியாக இராணுவத்திடம் கையளித்தது 2009, மே,07ம் திகதி தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் இராணுவப் பிரிவும் உத்தியோகபூர்வமாக கலைக்கப்பட்டதாக அன்று அறிவிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை அரசாங்கப் படையினர் வெற்றி கொண்டு விட்டதால், தமக்கு இனிமேல் ஆயுதங்கள் தேவை இல்லை என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திர காந்தன் 2009 மே 07ல் ஆயுதக் களைவு வைபவத்தில் பேசுகையில் தெரிவித்தார்.



மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இடம் பெற்ற ஆயுத கையளிப்பின் போது கிழக்குப் பிராந்திய கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தம்பத் பெர்னாண்டோ விடம் உத்தியோக பூர்வமாக ரிஎம்விபி கட்சியினர் கையளித்தனர். அன்று பிள்ளையான் அணியைச் சேர்ந்த பெரும்பாலான உறுப்பினர்கள் இராணுவத்தில் இணைந்தனர்.



இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சரும் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரசாந்தன், கிழக்குமாகாண பிரதிப்பொலிஸ்மா அதிபர் எட்வின் குணத்திலக, மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த வீரரிய, மாநகர முதல்வர் சிவகீத்தா பிரபாகரன் மற்றும் கட்சிப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

கையளிக்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பான விவரங்கள் வருமாறு:

1. ரி 56ரக துப்பாக்கிகள் 52.
3. அதற்கான மகசீன் 168 .
4. றவைகள் 2106,
5. எஸ்.எம்.ஜி.ரக துப்பாக்கி 01,
6. ரி 81ரக துப்பாக்கி 01,
7. ஏ.கே.எல்.எம்.ஜி.ரக துப்பாக்கிகள் 02,
8. ஆர்.பி.ஜி. உட்பட செல்கள் 46, வெளிச்சக் குண்டுகள் 16,
9. பி.கே. ரவுண்ஸ் 4650,
10. கைக்குண்டுகள் 02,
11. உட்பட பல்வேறு வகையான ஆயுதங்கள் கையளிக் கப்பட்டன.

2009 மே 07 ல் உத்தியோகபூர்வமாக இத்தனை ஆயுதங்கள் கையளிக்கப்பட்டாலும் உத்தியோகபூர்வமற்ற ஆயுதங்கள் தொடர்ந்தும் பிள்ளையான குழுவால் 2024, வரை இருந்துள்ளது.

ஆயுதங்களை ஒப்படைத்த முதலமைச்சர் பிள்ளை யான் அன்று ஆற்றிய உரை "தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை அரசாங்க படையினர் வெற்றிகொண்டு விட்டனர். அதனால் எமக்கு இனிமேல் அயுதங்கள் தேவை இல்லை.



தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைச் சேர்ந்த பெரும்பாலான உறுப்பினர்கள் இலங்கை இராணுவப் படையில் இணைந்துள்ளனர். எமது கட்சியிடம் இருந்த ஆயுதங்களை கையளித்துவிட்டோம் எமது உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் இராணுவத்தில் இணையவுள்ளனர். ஏனையோர் சுயதொழில் வாய்ப்பு பெறவுள்ளனர். எமது அங்கத்தவர்கள் பகலருக்கும் வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்படும்" என்று கூறினார்.



2008 மே 10ல் கிழக்கு மாகாணசபை தேர்தல் இடம்பெற்றபோது அதில் தமிழ்தேசிய கூட்டமைப்பு போட்டியிடவில்லை என பலர் குற்றம் சுமத்தினர். அதற்கான காரணம் இதுதான் அன்றைய நிலையில் கிழக்கு மாகாணசபை தேர்தலில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்களை நிறுத்தியிருந்தால் பலர் கொல்லப்பட்டிருப்பார்கள். பலர் கடத்தப்பட்டிருப்பார்கள் என்பதே உண்மை.

2008 கிழக்கு மாகாணசபை தேர்தலானது ஜனநாயக ரீதியாக இடம்பெறவில்லை ஆயுத அச்சுறுத்தலுடனேயே அந்த தேர்தல் இடம்பெற்றது.

2004 ஏப்ரல் தொடக்கம் 2010 வரை தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் வட கிழக்கில் செல்லமுடியாதவாறு உயிர் அச்சுறுத்தலால் கொழும்பிலும், சிறி ஜெயவர்தனபுர மாதிவெல வீட்டுத்

தொடர்ச்சி: பக்கம் 14



# கடந்த ஆண்டை போலல்லாது தீர்வுக்காய் காத்திருக்கும் மக்கள்

கிண்ணியான்

தமிழர் தாயகமான வடகிழக்கில் வாழும் மக்கள் பல இன்னல்களை அனுபவித்தனர். தற்போது புதிய ஆண்டு (2026 ) பிறந்த நிலையில், ஆசீர்வாதங்களுடனும் புதுப்பொழிவுடனும் வாழ வேண்டும் என மக்கள் நினைக் கின்ற போதும் அது சாத்தியமாக்கப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

குறிப்பாக தமிழ் பேசும் மக்களின் நில அபகரிப்பு, காணாமல் போனவர்களின் உறவினர்கள் போராட்டம், தனியார் காணிகளில் பௌத்தமயமாக்கல் என பல பிரச்சனைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இந்த நிலையில் இவ்வருடம் தங்களுக்கு சிறப்பானதொரு எதிர்காலமாக அமைய வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு என்று பலரும் பல கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

இது குறித்து திருகோணமலை நகரை சேர்ந்த சிவில் சமூக செயற்பாட்டாளர் திருமதி கோகிலவதனி தெரிவிக்கையில், "எமது நாட்டைப் பொறுத்த வரைக்கும் தமிழ் மக்களாகிய நாங்கள் எல்லா வகையிலும் ஒடுக் கப்படுகிறோம். மதம்,மொழி,இனம் என எல்லா வகையிலும் ஒடுக்கி அடக்கப்படுகிறோம்.இது காலம் காலமாக நடை பெற்று வருகிறது.

இந்த வருடத்திலாவது தமிழ் சமூகம் ஒடுக்கி அடக்கப்படாதளவுக்கு ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் சட்டங்களை நடை முறைப்படுத்த வேண்டும். சுதந்திர மாக வாழ வேண்டும் என்பதை இந்த வருடம் முதல் எதிர் பார்க்கிறோம். 500 மீற்றருக்கு ஒரு புத்தர் சிலையும் எமது பழமை வாய்ந்த தொன்மையான இடங்களில் புத்தர் சிலைகளை பௌவுத்த மத குருமார்கள், இராணுவம் மற்றும் காவல்துறையினர் உதவியோடு இரவோடு இரவாக தமிழ் மக்களுக்கு சொந்தமான நிலங்களில் வைத்து விடுகின்றனர்.

பின்னர் தொல்பொருள் என்ற போர்வையில் அதற்குரிய இடமென்று கட்டுப்படுத்தி தமிழர் நிலத்தை கபளீகரம் செய்வார்கள்.





இதே போன்று ஆலயங்களில் சைவ கடமைகளை செய்ய விடாது புத்தர் சிலையை நிறுவி விட்டு செல்வார்கள். இந்த அடாவடித்தனமான செயல் இவ்வருடத்தில் கடந்ந வருடத்தை போன்று இருக்க கூடாது. இனி வரும் கா லங்களில் நிம்மதியாக வாழக்கூடிய வழி வகைகளை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும். அப்போதுதான் இனமதவாதமாற்ற நாட்டை கட்டியெழுப்ப அரசாங்கத்தால் முடியும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்."

இலங்கை சுதந்திரம் அடந்தது முதல் ஆட்சி செய்த அரசாங்கம் தொடக்கம் தற்போது ஆட்சி அதிகாரத் தில் உள்ள அநுர அரசாங்கம் வரை வடகிழக்கில் நில ஆக்கிரமிப்பு - ஒரு தொடரும் சவால் மிக்கதாக காணப்படுகி றது என்றார்.

அத்தோடு மனித உரிமைகள் செயற்பாட்டாளர் சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் ( PCCJ ) அமைப்பின் ஊழியருமான த.கிரிசாந் தெரிவிக்கையில், எமது நாட் டில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் அல்லது அடக்கு முறைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. அத்துடன் இதுவரை இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கும் இன்று வரை இந்த அரசும் நீதியை நடைமுறைப்படுத்துவதாக தெரியவில்லை. வட








கிழக்கை பொறுத்தவரை மக்களின் பல்லாயிரம் ஏக்கர் காணிகள் முறையற்ற விதத்தில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதற்காக பாதிக்கப்பட்ட மக்கள் பல வழிகளிலும் போராடி வருகின்றனர்.

மயிலத்தனைமடு பண்ணையாளர்களின் நில மீட்பு போராட்டம் 900 நாட்களை நெருங்கியுள்ளது. திரு கோணமலை முத்துநகர் விவசாயிகளின் போராட்டம் திட்டமிட்ட வகையில் மழுங்கடிக்கப்பட்டு அவர்களின் நில உரிமை பறிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று பல உதாரணங்கள் உள்ளன. அரசு இவற்றை கண்டு கொள்வதாக இல்லை. மாறாக தொல்லியல் திணைக்களம்,வன வள திணைக்களம் மற்றும் மகாவலி அதிகார சபை போன்ற அரச கட்டமைப்புக்கள் தொடர்ந்தும் தமிழ் பேசும் மக்களின் நிலங்கள் ஆக்கிரமிக்கும் நோக்கி லேயே செயற்படுகின்றன.

இந்நிலையில் அரசும் மக்களின் போராட்டங்களை மழுங்கடிக்கும் கிராம மட்ட செயற்பாட்டாளர்களை தமது கட்சிக்கான உறுப்பினர்களாக மாற்றும் திட்டத்தை தற்போது ஆரம்பித்துள்ளது. இந்த செயற்பாடு பாதிக்கப்பட்ட மக்களை யும் அதற்காக குரல் கொடுப்பவர்களையும் ஏமாற்றும் திட்டம் என்பதை அனைவரும் புரிந்து கொள்வது மிகவும் கடினமான விடயமாகும்.

நாட்டிற்கு ஊழல் , வறுமை , போதை ஒழிப்பு எவ்வாறு முக்கியமோ அதே போன்று மனித உரிமைகளைப் பாதுகாப்பதும் நீதியை நிலைநாட்டுவதும் முக்கியமாகும்" என மேலும் தெரிவித்தார்.

பல ஆண்டுகளாக விவசாயம், மீன்பிடி, கலாசாரம் மற்றும் ஆன்மீக வாழ்வுடன் இணைந்த நிலங்கள் இன்று திட்டமிட்ட நில ஆக்கிரமிப்புகளுக்குள்ளாகி வருகின்றன. யுத்தத்துக்கு பின்னர் பாதுகாப்பு, அபிவிருத்தி, வன பாதுகாப்பு போன்ற காரணங்களை முன்வைத்து தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய நிலங்கள் கைப்பற்றப்படுவது மிகப்பெரிய பிரச்சினையாக மாறியுள்ளது.

இந் நிலையில், ஆக்கிரமிப்புகள் மக்களின் வாழ்வாதாரத்தை மட்டுமல்ல, அவர்களின் அடையாளத்தை யும் கேள்விக்குள்ளாக்குகிறது. விவசாய நிலங்கள் பறிபோகும் போது குடும்பங்களின் பொருளாதாரம் சீர்குலைகிறது. மீள்குடியேற்றம் தாமதமாகி, மக்கள் ஏமாற்றப்பட்டு வீதிக்கிறங்கி பல போராட்டங்களை முன் னெடுத்தனர்.

இதன் ஒரு கட்டமாக திருகோணமலை முத்து நகர் விவசாயிகளின் விவசாய நெற் செய்கை காணிகளை சூரிய மின் சக்தி உற்பத்திக்காக 800 ஏக்கர்கள் அபகரித்த நிலையில் அம் மக்கள் மழை ,வெயில் பாராது தொடர் சத்தியாக் கிரகப் போராட்டத்தை நடத்தி 50 நாட்கள் முன்னெடுத்தனர். ஆனால் துரதிஷ்டவசமாக திட்வா புயல் பேரிடர் காரணமாக போராட்டத்தை தற்காலிகமாக அந்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. ஆனால் தற்போது வரைக்கும் அம்மக்களுக்கான தீர்வு கிடைக்கவில்லை. இவ் வருடத்திலாவது நீதியான தீர்வு கிடைக்கும் என குறித்த விவசாயிகள் நம்புகின்றனர் என்றார்.

புதுவருடத்தில் மக்களின் எதிர்பார்ப்புக்குறித்து அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் ஒன்றியத்தின் திரு கோணமலை மாவட்ட பணிப்பாளர் எம்.எம்.எம்.முக்தார் தெரிவிக்கையில் "தற்போதைய அரசாங்கங்கமும் கடந்த கால அரசாங்கங்கள் போன்று சிறுபான்மை சமூகங்களின் உரிமைகள் தொடர்பான விடயங்களில் மறைமுகமாக செயற்பட்டு வருகின்றது. எடுத்துக்காட்டாக

தொடர்ச்சி: பக்கம் 15

# தாய்க்கட்சியும் தமிழ்த்தேசிய அரசியலும்!

**பா.அரியநேத்திரன்**

2026 புத்தாண்டு பிறந்துள்ளது எதிர்வரும் ஜனவரி 21 வந்தால் இரண்டு வருடங்களாக தாய்க்கட்சி என வர்ணிக்கப்படும் இலங்கை தமிழரசுக்கட்சிக்கட்சிக்குள் இரண்டு அணிகளாக பிரிவு தொடர்கிறது அதில் மாற்றுக்கருத்தில்லை. 2025ம் ஆண்டும் மகாநாடு நடத்த முடிய வில்லை.



2024 ஜனவரி 21 ல் வாக்கெடுப்பு மூலமாக தலைவர் தெரிவு நடந்ததால்தான் இந்த இரண்டு பிரிவுகளாக கட்சி இயங்குவதை எவரும் மூடி மறைக்க முடியாது. இதற்கான முழுப்பொறுப்பும் மறைந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர் சம்மந்தரும், மறைந்த இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி தலைவர் மாவை சேனாதிராசாவையுமே சாரும். இந்த இருவரும் உயிருடன் இருக்கும்போதே 17வது தேசிய மாகாநாட்டுக்கான ஆயத்தங்கள் 2024 நடந்தன. அப்போது தலைவராக சிவஞானம் சிறிதரனும், மதியாபரணம் சுமந்திரனும் விரும்பியுள்ளனர் என்ற விடயம் வெளிப் படையாகவே பேசப்பட்டது.

மத்தியகுழுவிலும் இருவரும் தலைவர் பதவிக் காக போட்டியிடப்போகிறார்கள் என்ற விடயம் வெளி வந்து. அப்போது இருவரையும் சமரசம் செய்து ஒருவரை தலைவராக இருக்குமாறு கூறுவதற்கு ஆளுமை சம்மந் தரிடமோ, மாவையரிடமோ இருக்கவில்லை.



இதற்கு நல்ல உதாரணம் தந்தை செல்வா உயிரோடு இருக்கும்வரை 1949 டிசம்பர் 18 ல் ஆரம்பித்த இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி 1973 செப்டம்பர் 07 வரை 12 தேசிய மகாநாடுகள் நடைபெற்றன அவை

**1. 1951 ஏப்ரல் 13-14-15ல் திருகோணமலையில், தலைவராக தந்தைசெல்வா,**
**2. 1953 ஜனவரி 01ல் யாழ்ப்பாணத்தில் தலைவராக தந்தைசெல்வா,**
**3. 1955 ஏப்ரல் 16-17ல் திருகோணமலையில் தலைவராக கு.வன்னியசிங்கம்,**
**4. 1956 ஆகஸ்ட் 17,18,19ல் திருகோணமலையில் தலைவராக கு.வன்னியசிங்கம்,**
**5. 1957 ஜூலை 27,28ல் மட்டக்களப்பில் தலைவராக கு.வன்னியசிங்கம்,**
**6. 1958 மே 23,24,25ல் வவுனியாவில் தலைவராக இராஜவோதயம்,**
**7. 1961 ஜனவரி 21 ல் யாழ்ப்பாணத்தில் தலைவராக சீ.மூ. இராசமாணிக்கம்,**
**8. 1962 ஆகஸ்ட் 31ல் மன்னாரில் தலைவராக சீ.மூ. இராசமாணிக்கம்**
**9. 1964 ஆகஸ்ட் 21,22,23ல் திருகோணமலையில் தலைவராக தந்தை செல்வா,**
**10. 1966 யூன் 23,24,25ல் கல்முனையில் தலைவராக டாக்டர் நாகநாதன்,**
**11. 1969 ஏப்ரல் 07,08,09 ல் யாழ்ப்பாணம் உடுவிலில் தலைவராக சீ.மூ.இராசமாணிக்கம்,**
**12. 197 ,செப்டம்பர் 07,08,09,ல் யாழ்ப்பாணம் மல்லாகத்தில் தலைவராக அ.அமிர்தலில்கம்,**

இந்த 12 மாகாநாடுகளிலும் தலைவர் தெரிவு உட் பட அனைத்தும் ஏகமனதாகவே நடைபெற்றது. இறுதியாக தந்தை செல்வா உயிருடன் உள்ள நிலையில் இடம்பெற்ற மகாநாட்டில் 1973 செப்டம்பர் 07 ல் தலைவர் பதவிக்கு மட்டக்களப்பு செல்லையா இராசதுரையும், யாழ்ப்பாணம் அப்பாபிள்ளை அமிர்தலிங்கமும் ஆசைப்பட்டு இரு வருக்கும் போட்டி நிலைமை ஏற்பட்டபோது தந்தை செல்வா இருவருடனும் அணுகி பேசி அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தை தலைவராக இராசதுரையின் ஒப்புதலு டன் தெரிந்தார்.

1973 தொடக்கம் 2010 வரை 37 வருடங்கள் தமி ழரசுக்கட்சி இயங்கவில்லை எந்த மகாநாடுகளையும் நடத் வில்லை இதற்கான காரணம் 1976 மே 14 ல் தமிழரசுக்கட்சி நிறுவனர் தலைவர் தந்தை செல்வா தமிழர் விடுதலை கூட்டணி என்ற புதிய கட்சி ஊடாக வட்டுக்கோட்டை தீர்மானம் “சுதந்திர தமிழீழம்” என நிறைவேற்றப்பட்டது. தேர்தல் கட்சியாக அது உதயசூரியன் சின்னத்தில் பதிவு செய்யப்பட்டது. அதனால் தமிழரசுக்கட்சி உறுப்பினர்களே தமிழர் விடுதலைக்கூட்டணியாக செயல்பட்டனர்.

1977 ஏப்ரல் 26ல் தந்தை செல்வா மரணித்த பின்னர் 1977 ஜூலை 21 இலங்கையின் தொகுதிவாரியான இறுதித் தேர்தல் இடம்பெற்று 2001 டிசம்பர் 06 பொதுத் தேர்தல் வரை தமிழர் விடுதலை கூட்டணி செயல்பட்டது. அதற்குபின்னர் ஆனந்தசங்கரி நீதிமன்றில் தமிழர் விடுதலை கூட்டணியை முடக்கியதால் 2004 ஏப்ரல் 08 தொடக்கம் இன்று வரையும் இலங்கை தமிழரசுக்கட்சி செயல்பட்டுகிறது. ஆனால் ஒற்று மையாக ஒரு அணியாக இப்போது இல்லை.

1973 க்கு பின்னர் தமிழரசுக்கட்சி மாநாடு 37 வருடங் களுக்கு பின்னர் 2010 ஜனவரி 13 தொடக்கம் 2019 ஜூன் 30 வரை 04 மகாநாடுகள் மட்டும் இடம்பெற்று மொத்தமாக 16 மகாநாடுகள் இடம்பெற்றன.

1. 2010 ஜனவரி 13ல் யாழ்ப்பாணம் நல்லூரில் தலைவராக இரா.சம்பந்தன், 2. 2012 மே 26, 27ல் மட்டக்களப்பில் தலைவராக இரா.சம்பந்தன், 3. 2014 செப்டம்பர் 06, 07ல் வவுனியா தலைவராக மாவை சேனாதிராசா, 4. 2019 ஜூன் 29, 30ல் யாழ்ப்பாணத்தில் தலைவராக மாவை. சேனாதிராசா. யாழ்ப்பாணம் நல்லூரில் 13, வது தேசிய மாநாடு இடம்பெற்றது அதில் தலைவராக இரா.சம்பந்தன், பொதுச்செயலாளராக மாவை சேனாதிராசா தெரிவானார். 14 வது மாநாடு 2012, 15, 2004 ல் 17 வது மகாநாடு நடைபெற இருந்த நிலையில்தான் அது முரண்பாடாகி தடை ஏற் பட்டது.

2024 ஜனவரி 21 ல் பொதுச்சபை உறுப்பினர்கள் 321 பேர் வாக்கெடுப்பு மூலம் தலைவர் தெரிவு திரு கோணமலையில் இடம்பெற்றபோது 184 வாக்குகளை சிவஞானம் சிறிதரன் பெற்று தலைவராக தெரிவானார். 137 வாக்குகளை பெற்று மதியாபரணம் சுமந்திரன் தோல் வியுற்றார். சீனித்தம்பி யோகேஷ்வரன் சிறிதரனை ஆதரித் தமையால் அவர் எந்த வாக்குகளையும் பெறவில்லை.

அதன் பின்னர் 2024 ஜனவரி 27 ல் ஏனைய பொதுச்செயலாளர், மத்தியகுழு உறுப்பினர் தெரிவில் பொதுச்சபையில் ஏற்பட்ட முரண்பாடுகளால் ஏனைய தெரிவுகள் இடம்பெறவில்லை.

அன்றே இரண்டு அணிகளாக கருத்து பரி மாற்றங்கள், முரண்பாடுகள் எழுந்தன அதுதொடர்பாக அந்த முரண்பாடுகளையும் தீர்க்க முடியாமையால் தமிழரசுக்கட்சி உறுப்பினர்களை கொண்டு கட்சியில் உள்ள ஒரு அணியினரால் கடந்த 2024 பெப்ரவரி 15 ல் மகாநாட்டை தடைசெய்ய இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

**1. திருகோணமலை நீதிமன்றில் சந்திரசேகரம் பரா என்பவரால் வழக்கு தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவுகளை ஆட்சேபித்து, திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.**

**2. யாழ்ப்பாணம் நீதிமன்றில் மத்திய குழு உறுப்பினர் பீற்றர் இளஞ்செழியனும் வழக்கு கட்சியின் மாநாட்டை நடத்துவதற்கு எதிராக, யாழ்ப்பாணம் மாவட்ட நீதி மன்றில் வழக்கு தாக்கல் செய்தார்.**

இந்த இரண்டு வழக்குகளை விட மேலும் மூன்று வழக்கு கள்..

**3- 2024 அக்டோபர் 14ல் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி யின் நிர்வாகச் சீர்கேட்டை மையப்படுத்திய புதிய வழக்கொன்றை யாழ். நீதிமன்றில் தமிழ் அரசுக் கட்சி யின் ஆயுட்கால உறுப்பினரான மார்க்கண்டு நடராசா அவர்கள் சமர்ப்பித்ததாக தகவல்.**

**4. 2025 ஜூன் மாதம் காங்கேசன்துறை தொகுதி கிளை செயலாளர் இளவாலையை சேர்ந்த இராசேந்திரன் என்பவர் யாழ் நீதிமன்றில் கட்சி செயல்பாடுகளுக்கு எதிராக ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என தகவல்.**

**5. இதேவேளை 2024 நவம்பர் 17 ல் மத்தியகுழு முல்லைத் தீவு உறுப்பினர் வைத்தியர் சிவமோகன் கட்சி பதில் செயலாளருக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கை 2025 ஜூன் 17ல் மீளப்பெற்றுக்கொண்டு வழக்கை வாபஸ் வாங்கினார்.**

இவ்வாறு 05, வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு தற்போது ஏறக்குறைய இரண்டு வருடங்களாக நீதிமன்றில் வழக்குகள் தொடர்கிறது. இதில் வேடிக்கை என்னவெனில் இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி வேண்டும் என கோஷம் இடும் தமிழரசுக்கட்சி அதே உறுப்பினர்களே தமது கட்சிக்கு நீதி வேண்டி இலங்கை நீதிமன்றத்தை நாடியுள்ளனர்.

இதற்கிடையில் இறுதியாக 2019 ஜூன் 30 ல் 16வது தேசிய மாநாட்டில் பொதுச்செயலாளராக தெரிவான மட்டக்களப்பு கி.துரைராசசிங்கம் 2020 செப்டம்பர் 09 ல் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து இராஜனாமா செய்ததை அடுத்து அந்த வெற்றிடத்திற்கு பதில் பொதுச் செயலாளராக வவுனியா ப.சத்தியலிங்கம் மத்தியகுழுவால் நியமிக்கப்பட்டிருந்தார்.

இவர் 2024 ஜனவரி 21,27 கட்சி தலைவர் தெரிவு, பொதுச்சபை கூட்டங்கள் எதிலும் கலந்துகொள்ளாமல் சுகவீனத்தை காரணம் காட்டி தவிர்த்தார். அவருடைய பிரசன்னம் இல்லாமலேயே அவைகள் இடம்பெற்றன. முதலாவது பதில் செயலாளர் சத்தியலிங்கமும் கடந்த 2025 பெப்ரவரி 16ல் களுவாஞ்சிகுடி மத்தியகுழுக்கூட்டத்தில் பதவியில் இருந்து விலகி சுமந்திரன் 02 வது பதில் பொதுச்செயலாளராக மத்தியகுழு நியமித்தது.

இதேவேளை 2024 டிசம்பர் 28ம் திகதி வவுனியா வில் இடம்பெற்ற மத்தியகுழு கூட்டத்தில் பதில் தலைவராக சி.வி.கே.சிவஞானம் தெரிவாகினார். இந்நிலையில் தற் போது நிரந்தர தலைவர், நிரந்தர பொதுச்செயலாளர் இன்றி பதில் பதவிகளுடனேயே கட்சி இயங்குகிறது.



இவ்வாறான நிலையில் கடந்த 2024 நவம்பர் 14 பொதுத்தேர்தலில் 08 பாராளுமன்ற உறுப்பினர்கள் தமி ழரசுக்கட்சியால் தெரிவாகியுள்ளபோதும் பாராளுமன்ற குழுத்தலைவராக சிறிதரனையும், பாராளுமன்ற குழு பேச்சாளராக ஸ்ரீநேசனையும் தெரிவு செய்த போதும் அவர்களையும் ஒழுங்காக இயங்கவிடாமல் தமிழரசுக் கட்சிக்குள்ளேயே முரண்பாடுகள் தொடர்கிறது.

இந்த உள்ளக முரண்பாடுகளும், தனிநபர் ஆதிக்கமும் தமிழரசு கட்சிக்குள் ஏறக்குறைய இரண்டு வருடங்களாக தொடர் பிரச்சினைகளால் மக்களுக்கு சார்பாக முடிவுகள், மக்களை தேசமாக கட்டி எடுத்து கொள்கை ரீதியாக அறவழிப்போராட்டங்களை நடத்த முடியாத நிலை தொடர்கிறது.

தற்போது தமிழரசுக்கட்சியும், ஜனநாய தமிழ் தேசிய கூட்டணியும், அதோடு ஈபிடிபியில் இருந்து வில கிய மு.சந்திரகுமாரும் இணைந்து செயல்படுவதாக அறிவித்தாலும் மாகாணசபை தேர்தல் அறிவிப்பு வந்தால் இவர்களுடைய ஒற்றுமை வேட்பாளர் தெரிவுகளால் விட்டுக்கொடுப்புகள் இல்லை எனில் இந்த கூட்டும் சிதறக்கூடிய வாய்ப்பே உள்ளது.

தாய்க்கட்சியான தமிழரசுக்கட்சியின் ஒற்றுமை ஈனத்தால் தமிழ்தேசிய கொள்கை அரசியல் நேர்த்தியாக முன் செல்லுவதில் 2026 ம் ஆண்டும் தடுமாற்றமே செல்லும்.

• • •

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தமிழகப் பயணமும் சலசலப்புகளும்

**தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார்பொன்னம்பலத்தின்சமீபத்தில் இந்திய பயணம் தொடர்பாக எழுந்த அரசியல் சர்ச்சைகள், விமர்சனங்கள் மற்றும் தவறான புரிதல்கள் குறித்து இந்த நேர்காணலில் விரிவாக விளக்குகிறார் விளக்குகிறார் ஐ.வி. மகாசேனன். ஈழத் தமிழர் அரசியல் நிலை, தமிழகத்துடனான உறவுகள், தமிழர் தேசிய அரசியலின் எதிர்கால திசை ஆகியவை குறித்து தெளிவான, விரிவான கருத்துகள் இதில் முன் வைக் கப்படுகின்றன.**

**உயிரோடைத் தமிழ் வானொலிக்கு ஐ.வி. மகாசேனன் அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**



**கேள்வி:**

**தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் இந்தியா- தமிழ்நாட்டுக்கான பயணம் பெரும் சலசலப்பையும், பல்வேறுவிமர்சனங்களையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த பயணத்தின் உண்மையான நோக்கம் என்ன?**

இந்த பயணம் தனிப்பட்ட சந்திப்பு அல்லது குறுகிய அரசியல் நடவடிக்கையாகப் பார்க்க முடியாது. ஈழத் தமிழர்அரசியல் இன்று ஒரு மிக முக்கியமான கட்டத்தில் நிற்கிறது. போருக்குப் பிறகான அரசியல் சூழலில், தமிழர்கள்தொடர்ச்சியாக ஒதுக்கப்பட்டு, அரசியல் தீர்வு என்ற அடிப்படை கோரிக்கையே மறுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், தமிழகத்துடன் உள்ள அரசியல், சமூக, உறவை மீண்டும் வலுப்படுத்த வேண்டிய தேவைஉருவாகியுள்ளது. தமிழக அரசியல் வெளி என்பது ஈழத் தமிழர் பிரச்சினைக்கு வரலாற்று ரீதியாகவும், அரசியல்ரீதியாகவும் முக்கியமான ஒரு தளம். அந்தத் தளத்தில் நேரடி உரையாடல், விளக்கம், தெளிவுபடுத்தல் ஆகியவைஅவசியமாகியுள்ளன. அந்த அடிப்படையிலேயே இந்த பயணம் திட்டமிடப்பட்டது.

**கேள்வி:**

**இந்தப் பயணத்தைச் சுற்றி சிலர் சந்தேகங்களையும், குற்றச்சாட்டுகளையும் முன்வைக்கிறார்கள். குறிப்பாக "மறைமுகஅரசியல்" என்ற விமர்சனம் எழுகிறது. அதற்கு உங்கள் பதில் என்ன?**

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி எப்போதும் வெளிப்படையான அரசியலை மட்டுமே முன்னெடுத்து வந்துள்ளது.மறைமுக அரசியல் என்பது எங்கள் அரசியல் பண்பாட்டுக்கு முற்றிலும் எதிரானது. நாங்கள் யாருடனும் இரகசியஒப்பந்தங்களோ, பின்னணி அரசியலோ நடத்தவில்லை.

சிலர் திட்டமிட்டு, இந்த பயணத்தைப் பயன்படுத்தி தமிழர்களுக்கிடையே சந்தேகத்தையும், குழப்பத்தையும் விதைக்கமுயல்கிறார்கள். அது புதிய விஷயம் அல்ல. கடந்த காலங்களிலும் தமிழ்த் தேசிய அரசியல் வலுப்பெறும் ஒவ்வொருதருணத்திலும் இப்படியான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் உண்மை என்னவென்றால், இந்தப்பயணம் முழுமையாக அரசியல் உரையாடலுக்கானது, விளக்கத்திற்கானது, தெளிவுபடுத்தலுக்கானது.

**கேள்வி:**

**தமிழக அரசியல் கட்சிகளுடன் உங்கள் அமைப்பின் உறவு எவ்வாறு உள்ளது? ஏதேனும் கூட்டணி அரசியல் உள்ளதா?**

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கு தமிழகத்தில் எந்தக் கட்சியுடனும் தேர்தல் அடிப்படையிலான கூட்டணி அரசியல்இல்லை. ஆனால் தமிழர் தேசிய நலன் பேசப்படும் இடத்தில் உரையாடலை தவிர்க்க முடியாது.

தமிழக அரசியல் கட்சிகள் இந்திய அரசியல் அமைப்பில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஈழத் தமிழர் அரசியல்பிரச்சினை சர்வதேச அளவிலும், இந்திய அரசியல் அளவிலும் எடுத்துச் செல்லப்பட வேண்டு மானால், தமிழக அரசியல்தலைமைகளுடன் கருத்துப் பரிமாற்றம் அவசியம். கருத்து வேறுபாடுகள் இருப்பது இயல்பானது. ஆனால் அந்தவேறுபாடுகளை மறைத்து அல்ல, வெளிப்படையாக வைத்து பேசுவதே அரசியல் நேர்மை.

**கேள்வி:**

**இந்த பயணத்தின் மூலம் நீங்கள் அடைய விரும்பும் நீண்டகால அரசியல் இலக்கு என்ன?**

நீண்டகால இலக்கு மிகத் தெளிவானது. ஈழத் தமிழர் பிரச்சினை ஒரு தற்காலிக மனித உரிமைப் பிரச்சினையாக மட்டுமே பார்க்கப்படக் கூடாது. அது ஒரு தேசிய அரசியல் பிரச்சினை. அதற்கு அரசியல் தீர்வே தேவை.

தமிழகத்தில் உள்ள இளைஞர்கள், மாணவர்கள், அறிவுஜீவிகள், அரசியல் செயற்பாட்டாளர்கள் இந்த விடயத்தைஆழமாக புரிந்து கொள்ள வேண்டும். உணர்ச்சி அரசியல் மட்டுமல்ல, வரலாற்று உண்மை, அரசியல் யதார்த்தம்,சர்வதேச சூழல் ஆகியவற்றையும் இணைத்த ஒரு தெளிவான பார்வை உருவாக வேண்டும். அந்தப் புரிதலே எதிர்காலஅரசியல் அழுத்தங்களுக்கான அடித்தளமாக அமையும்.

**கேள்வி:**

**இந்தப் பயணம் அரசியல் இலாபத்திற்காக, அல்லது அதிகார அரசியலுக்காக நடத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டுகள்உள்ளன. அது குறித்து என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

அந்தக் குற்றச்சாட்டுகள் முற்றிலும் தவறானவை. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அதிகாரத்தை நோக்கி ஓடும் அரசியல் அமைப்பு அல்ல. நாங்கள் தேர்தல் வெற்றியைமட்டும் இலக்காகக் கொண்டு இயங்கவில்லை. எங்கள் அரசியல் அடிப்படை – அடையாளம், உரிமை, அரசியல் தீர்வு.

அரசியல் இலாபம் என்பதே எங்கள் அரசியலின் மையமாக இருந்திருந்தால், பல சமயங்களில் எளிய பாதைகளைத்தேர்ந்தெடுத்திருக்கலாம். ஆனால் நாங்கள் கடினமான, நேர்மையான, நீண்டகால பாதையைத் தான்தேர்ந்தெடுத்துள்ளோம். அது உடனடி இலாபம் தராத பாதையாக இருந்தாலும், தமிழர் அரசியலுக்கான சரியான பாதைஅதுவே.

**கேள்வி:**

**தமிழக தமிழர்களுக்கும், உலகத் தமிழர்களுக்கும் நீங்கள் சொல்ல விரும்பும் முக்கியமான செய்தி என்ன?**

ஈழத் தமிழர் போராட்டம் முடிந்துவிட்டது என்று நினைப்பது ஒரு ஆபத்தான தவறான புரிதல். அந்தப் போராட்டம் ஒருபுதிய அரசியல் கட்டத்துக்குள் நுழைந்துள்ளது. அந்தப் போராட்டம் வெற்றி பெற வேண்டுமென்றால், உணர்ச்சிமட்டுமல்ல, அரசியல் தெளிவும் அவசியம்.

தமிழர்கள் தங்கள் வரலாற்றை மறக்கக் கூடாது. அதே நேரத்தில், கடந்த காலத்தில் சிக்கி நிற்கவும் கூடாது. இன்றையஅரசியல் யதார்த்தத்தை புரிந்து கொண்டு, ஒருங்கிணைந்த, அறிவார்ந்த அரசியல் அணுகுமுறையை உருவாக்கவேண்டிய காலத்தில் இருக்கிறோம். அதற்கான அழைப்பாகவே இந்த வருகையையும், இந்த உரையாடல்களையும்பார்க்க வேண்டும்.

• • •

## 2026 சாவல்கள் ... தொடர்ச்சி...

தித்வா புயலால் ஏற்பட்ட 4.1 பில்லியன் டொலர்கள் இழப்பு, நாட்டின் மொத்த தேசிய வளர்ச்சியை 3.1சதவீத மாகக் குறைத்துள்ளது. 2026ஆம் ஆண்டிலிருந்து சர்வ தேசக் கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதால், அரசாங்கத்தின் சமூக நலத்திட்டங்களுக்குப் பெரும் சவால்கள் உருவாகியுள்ளன.

'Public Investment Programme 2026–2030' எனும் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், சிதைந்த பாலங்களும் வீதிகளும் காலநிலை மாற்றத்தைத் தாங்கும் வகையில் மீண்டும் கட்டப்படுகின்றன. சுற்றுலாத்துறை 'Island of Resilience ' என்ற அடையாளத்துடன் உயிர்த்தெழுந்தாலும், நாட்டின் வறுமை விகிதம் இன்னும் 24சதவீதமாக நீடிப்பது அபாயகரமானது.

குறிப்பாக, நாட்டின் நடுத்தர வர்க்கத்தினர் வரிச்சுமையாலும், ஏழை மக்கள் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தாலும் தவிக்கும் நிலையில், 2026 இன் பொருளாதார வெற்றி என்பது புள்ளி விபரங்களில் மட்டுமல்லாது, சதாரணமான மக்களின் சமையலறைகளிலும் பிரதிபலிக்க வேண்டியது அவசியமாகிறது. ஆனால் அதனை உறுதிப்படுத்தக்கூடிய நிலையில் அரசாங்கம் இல்லை.

இவ்வாறான நிலையில், இந்தியப் பெருங்கடல் புவிசார் அரசியலில், இலங்கை தன்னை ஒரு 'நடுநிலைச் சமநிலையாளராக' காண்பிக்க முனையும் முனைப்பு இந்த ஆண்டிலும் நீடிக்கப்போகிறது. ஆனால் அது வழமைக்கு மாறாக நெருப்பாற்றை கடப்பதற்கு நிகராகவே இருக்கும்.

இந்தியா எரிசக்தி மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் இலங்கையின் பிரிக்க முடியாத பங்காளியாக மாறியுள்ளது என்று அறிவித்துள்ள நிலையில் திருகோணமலை எரிசக்தி மையம் மற்றும் இந்தியாவிற்கு இடையிலான மின்சார இணைப்புத் திட்டங்கள் 2026 இல் நிறைவடையும் நிலையில் உள்ளன. இந்த நிலைமையானது, இந்தியா தனது 'பிடி'யை அநுர அரசாங்கத்தின் மீது மேலும் வலுவாக்கும் நிலைமையை தோற்றுவித்திருக்கின்றது.

அதேநேரம், சீனா தனது மென்வலு அரசியலின் மூலம் அம்பாந்தோட்டை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத் திட்டத்தினை முன்னெடுப்பதற்கும் கொழும்பு துறைமுக நகரம் வழியாக தெற்காசிய மைய வர்த்தக ஆதிக்கத்தைத் தொடர்வதற்குமான விரிவுபடுத்தல்களில் இறங்கியுள்ளது.

அத்தோடு, திபெத்துக்கு அண்மித்துள்ள ஷிசாங் தன்னாச்சி பிராந்தியத்துடன் இலங்கையை பௌத்தத்தின் பெயரால் இணைத்துக்கொள்வதற்கும் முனைகின்றது. அதுமட்டுமன்றி, ஒத்திகை நடவடிக்கையாக சீன-இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை ஓராண்டுக்கு முன்னெடுப்பதற்கான முயற்சியை இந்த ஆண்டிற்குள் நடைமுறைப்படுத்துவதற்கும் சீனா தீவிரமாக செயற்பட ஆரம்பித்துள்ளது.

மறுபக்கத்தில் அமெரிக்காவின் புதிய தூதுவர் எரிக் மேயர் அடுத்துவரும் நாட்களில் பதவிக்கு வரவுள்ளார். இவர், ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நியமனத்தில் பதவிக்கு வருபவராக இருக்கையில் இவருடை சிந்தனைகளும் செயற்பாடுகளும் ட்ரம்பின் பிரதிபலிப்புக்களாகவே இருக்கப் போகின்றன. அவை நிச்சமயாக இலங்கை தீவு தேசத்தில் பல்வேறு விளைவுகளை உருவாக்கக் கூடியவையாக இருக்கும் என்பதை எதிர்பார்க்க முடியும்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையைப் பெறுவதற்கு, மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இலங்கை உள்ளது. விசேடமாக பயங்கரவாத தடைச்சட்டத்தினை மாற்றியமைக்க வேண்டியுள்ளது. எவ்வாறாக இருப்பினும் ஐரோப்பிய ஒன்றியம் அனர்த்த நிலைமைகளை மையப்படுத்தி கிடுக்குப்பிடியின்றி வரிச்சலுகையை உறுதி செய்யும் போக்கு தான் காணப்படுகின்றது.

இவ்வாறாக பார்க்கின்றபோது 2026என்பது இலங்கையின் வரலாற்றில் மிக முக்கியமான தருணங்களை கொண்டிருக்கப்போகின்றது. அதேபோன்று அரசியல் விசித்திரங்களையும், மக்கள் போராட்டங்களையும் தாராளமாகவே பார்க்க முடியும். அப்போது ஆட்சியாளர்களின் மற்றொரு முகம் வெளிப்படும். அது ஒட்டுமொத்த சமநிலைகளையும் குழப்புவதாகக் கூட இருக்கலாம்

• • •

# இலக்கின் தேடலில் சிக்கிய “அம்பாறைத் தமிழர் வரலாற்றுச் சுவடுகள்”

கடந்த 2025.12.28 அன்று அம்பாறை மாவட்டம் கல்முனையில் பெருவிழாவாக இடம்பெற்ற “அம்பாறைத் தமிழர் வரலாற்றுச் சுவடுகள்” எனும் வரலாற்று ஆய்வு நூல் வெளியீடு பற்றிய இலக்கின் தேடல்.

மனித உரிமை செயற்பாட்டாளரான திரு.தாமோதரம் பிரதீவன் அவர்களினால் ஆய்வு செய்யப்பட்டு எழுதி வெளியீடு செய்யப்பட்ட இவ்வரலாற்று ஆய்வு நூலானது தமிழர் தேசத்தின் வரலாற்றில் ஒரு முக்கிய ஆவணமாக அம்பாறைத் தமிழரின் பண்டைய வரலாற்றையும் தற்கால நிலைகளையும், வாழ்வியலையும்,அவலங்களையும்,அபகரிப்புகள்,படுகொலைகள் என பல அம்சங்களையும் தொட்டுச் சிறப்பாகப் படைக்கப்பட்டுள்ளது.



இந்நூலுக்கான வரலாற்று ஆய்வுகளை 2018 ம் ஆண்டில் இருந்து தான் ஆரம்பித்ததாகவும் அன்று முதல் தான் சந்தித்த பல கசப்பான அனுபவங்கள்,அச்சுறுத்தல்கள்,விசாரணைகள் மற்றும் அந்த வலி நிறைந்த நாட்கள் பற்றியும் பல்வேறு உண்மைகளையும் வெளிப்படுத்தி ஏழு வருடங்களாகத் தொடர்ந்த தன் ஆய்வுப் பணியின் பெறுமதிமிக்க ஆவணத்தைப் படைத்துச் சமர்ப்பித்திருந்தார் நூலாசிரியர் திரு.தாமோதரம் பிரதீவன்.

இப்படைப்பானது ஏழு வருட தேடல்களிலும் வரலாற்று ஆவணங்களில் பெறப்பட்ட குறிப்புகளிலும் இருந்தும் பெறப்பட்ட கிறிஸ்துவுக்கு முன்னரான மற்றும் கிறிஸ்துவுக்கு பின்னரான வரலாற்று ஆதாரங்களோடும் போத்துக்கீசர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் காலத்து வரலாற்று ஆதாரங்களோடும் குறித்த இடங்களின் 2025ம் ஆண்டு வரைக்குமான நிலைமைகளையும் நேரடியான தன் பார்வைகளில் அவதானித்து அறிந்து தொகுத்துப் படைத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



தனது இந்தப் படைப்பானது இதுவரை வெளிவந்த படைப்புகளில் இருந்து சற்று வித்தியாசமானதாக இதை வாசிக்கின்ற போது வெளிப்படும். இதுவரை வெளிவந்த அம்பாறை மாவட்ட தமிழர்களின் வரலாறு அல்லது பூர்வீகங்கள் அல்லது தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் அல்லது தமிழர்களுடைய பூர்வீக வரலாற்றுடனும் தற்காலம் வரையும் தொடர்பான ஆவணங்களோடு ஒத்துப் பார்க்கிற போது மிகவும் வித்தியாசமானதாகவே இந்தப் படைப்பு வெளிப்படும்.



அந்த அளவிற்கு இந்த படைப்பை உருவாக்குவதற்கான தேடல்களை மிகுந்த சிரமத்தோடும், பல்வேறு அச்சுறுத்தல்கள், எதிர்ப்புகள், பல சவால்களுக்கும் மத்தியில் ஒவ்வொரு இடங்களுக்கும் நேரடியாகச் சென்று பார்வையிட்டு ஆதாரங்களைத் திரட்டி அங்கு வாழ்ந்த மக்களை அவர்கள் தற்போது வாழும் இடங்களுக்கு நேரடியாகச் சென்று பேசி அவைகள் தொடர்பாக அறிந்து, அவர்களது ஒலி,ஒளி வடிவ மற்றும் எழுத்துமூல ஆதாரங்கள் திரட்டியதோடு இதுவரை வெளிவந்திருக்கக் கூடிய தன் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய பல ஆய்வாளர்கள், எழுத்தாளர்களின் ஆதாரங்களையும் ஆராய்ந்து, தேடி அவைகளோடும் தன் தேடல்களை சரிபார்த்துப் படைத் திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டதோடு,

அம்பாறை மாவட்ட தமிழர் வரலாறுகளை முடிந்த அளவு முழுமையாகக் கொண்டு வர வேண்டும் என்ற நீண்ட நாள் எண்ணத்தின் அடிப்படையில் முதற்கட்டமாக முதல் அடியை எடுத்து வைப்பதற்காக அம்பாறை மாவட்ட தமிழர்களின்



பூர்வீக தமிழ் கிராமங்களாக இருந்து இல்லாமல் போன கிராமங்கள், அதேபோன்று தமிழர்களுடைய பூர்வீக அடையாளங்கள், அந்தக் கிராமங்களுக்கும் தமிழர்களின் புராதன வரலாற்றுக்கும் இடையிலான தொடர்புகள், புராதன வரலாற்று ஆதாரங்கள், அதேபோன்று விஷேடமாக தமிழர்களின் பூர்வீகங்களாக இருந்த கிராமங்கள் அழிக்கப்பட்ட வரலாறுகள், தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகள், படுகொலைகள் போன்ற பல விடயங்களை உள்ளடக்கியதாக முதல் 10 தமிழர் பூர்வீக கிராமங்களை அடையாளப்படுத்தி அதில்

**01.ஆலங்குளம்**
**02.அட்டாளைச்சேனை**
**03.மீனோடைக்கட்டு**
**04.பாலமுனை**
**05.திராய்க்கேணி**
**06.சிங்காரபுரி/அட்டப்பள்ளம்**
**07.நிந்தவூர்**
**08.வீரமுனை**
**09.கரவாகு/சாய்ந்தமருது**
**10.செங்காமம்**

போன்ற

தமிழர் பூர்வீகக் கிராமங்களின் புராதன வரலாறுகள், அந்த கிராமங்களுக்கும் அங்கு வாழ்ந்த மக்களுக்கும் நடந்த அல்லது இழைக்கப்பட்ட அநீதிகள், அவர்களுடைய கடந்த கால வாழ்வியல், தற்கால வாழ்வியல் போன்ற பல்வேறு விடயங்களையும், ஆதாரங்களையும் சேர்த்து தொகுத்த ஒரு ஆவணப் படைப்பாக இதைக் கொண்டு வந்திருக்கிறார் ஆய்வாளர்.



இந்த படைப்பில் வெளிக்கொண்டு வரப்படுகின்ற குறித்த 10 கிராமங்களும் தன் ஏழு வருடத் தேடலின் வந்த காரணம் பற்றியும் கூறிய அவர், ஆரம்பமாக ஆலங்குளம் எனும் பூர்வீக தமிழர் கிராமத்தில் இன்றும் அடையாளமாகக் காணப்படுகின்ற ஆலயத்தின் வரலாறு தொடர்பான




தேடலை ஆரம்பிக்கின்ற போது அதனோடு தொடர்புபட்ட மற்றும் அதன் அயல் பிரதேசங்களாகவும், தன் தேடலின் இலகு படுத்தல்களின் அடிப்படையிலும், அவைகளுக்கான வரலாற்று ஆதாரங்களின் அடிப்படையிலும் இந்த 10 கிராமங்களையும் நான் தேர்வு செய்திருந்தேன். எனவும் அதில் விஷேடமாக இந்த பிரதேசத்தில் இருந்து சற்று தொலைதூரத்தில் இருக்கக்கூடிய பொத்துவில் பிரதேசத்தின் செங்காமம் எனும் கிராமத்தையும் தேர்வு செய்ததாகவும், இதற்குக் காரணம் கடந்த 2020 ஆம் ஆண்டு அந்த கிராமத்தின் நிலை பற்றி எனது நண்பர்களூடாக அறிந்தவுடன் அங்கு செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டு அங்கு சென்று வருகின்ற வேளைகளில் அந்தக் கிராமமும் பல இன்னல்களைச் சந்தித்து மீண்ட கிராமமாகவும் இன்றளவும்கூட அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களின் வாழ்வியலில் காணப்படக்கூடிய நிலைகளை வெளிப்படுத்தி நிற்கும் கிராமமாகவும் காணப்படுவதாலும், அதையும் இந்த தொகுப்பில் உள்ளே கொண்டு வந்திருக்கிறேன் எனவும் அவர் கூறினார்.



மேலும் இவைகள் கடந்து இன்னும் பல தமிழ் கிராமங்கள் இவரது ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்தாலும் இந்த பத்து தமிழ் கிராமங்கள் தொடர்பான ஆய்வுகள் பூரணப்படுத்தப்பட்டு அல்லது நினைத்த இலக்குக்கு அது கொண்டு வந்து சேர்க்கப்பட்டிருக்கிறது என்ற அடிப்படையில் முதல் கட்டமாக ஒரு படைப்பு வெளியிடப்பட வேண்டும் என்பதற்காகவுமே இந்த 10 கிராமங்களும் தேர்வு செய்யப்பட்டு தொகுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் வெளிப்படுத்துகிறார்.

இப்படைப்பு படைக்கப்படுவதன் நோக்கமும், வெளிப்படுத்தப்படுவதன் நோக்கமும் தற்போதைய அம்பாறை மாவட்டம் என்பது தமிழர்களுடைய கடந்த கால வரலாறுகளில் எவ்வாறு இருந்தது, இந்த மாவட்டத்தில் தமிழ் மக்கள் எவ்வாறான வாழ்வியலை வாழ்ந்திருக்கிறார்கள், எவ்வாறான துன்ப, துயரங்களை அனுபவித்திருக்கிறார்கள், எவ்வாறான இன்னல்கள் இடையூறுகளுக்கு மத்தியிலும் தமிழர்களாக அவர்களின் கலை. கலாசாரம், பண்பாடு,அதன் விழுமியங்களை அடியொற்றியவர்களாக வாழ்ந்திருந்தார்கள்,வாழுகிறார்கள், தமிழர் வாழ்வியலின் ஆதாரக் கல்வெட்டுகள், ஆலயங்கள்,வாழ்விடங்கள் போன்றவற்றோடும் அழிக்கப்பட்ட வரலாற்று மிச்சங்கள், அங்கு கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித குலம் வெறுக்கத்தக்க மிலேச்சத்தனம் மிக்க படுகொலை என்பன உள்ளிட்ட அத்தனை விடயங்களும் ஆவணங்களாக்கப்படு அடுத்த தலைமுறையும் அதை அறியவும் அதன் மூலமாகத் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளவும் இனியும் இவ்வாறெல்லாம் தவறுகள் மீள நடக்காமல் இருப்பதற்காகவும் வரலாறுகளையும் அடயாளங்களையும் பேணிப் பாதுகாக்கவும் இது ஆவணமாக்கப்பட்டு ஒரு புத்தகப் படைப்பாகிறது.

இந்நூலில் விசேடமாக வீரமுனைப் படுகொலை,

**தொடர்ச்சி: பக்கம் 15**



# மலையகக் கல்விப் பாதையில் இயற்கை அனர்த்தங்களும் கொள்கை முரண்பாடுகளும்: ஓர் அபாய எச்சரிக்கை

மருதன் ராம்

இலங்கையின் மலையகச் சமூகம் இரண்டு நூற்றாண்டுக்கும் மேலாகத் தனது இருப்பிற்காகவும் உரிமைகளுக்காகவும் போராடி வருகிறது. அந்தப் போராட்டத்தின் மிக முக்கியமான ஆயுதம் 'கல்வி'. ஆனால் இன்று, அந்த ஆயுதம் இயற்கை அனர்த்தங்கள் மற்றும் திட்டமிடப்பட்ட கொள்கை மாற்றங்கள் எனும் இருமுனைத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.



இந்தநிலையில் மலையகக் கல்வி அடைந்துள்ள முன்னேற்றங்கள், எதிர்கொள்ளும் வீழ்ச்சிகள் மற்றும் முன்வைக்கப்பட வேண்டிய அரசியல் கோரிக்கைகள் குறித்து ஆழமாக நோக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. இதன்படி, இலங்கையின் மலையகப் பாடசாலைக் கல்வி இன்று ஒரு பாரிய நெருக்கடி நிலையைச் சந்தித்துள்ளது. ஒருபுறம் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் மண்சரிவு மற்றும் இயற்கை அனர்த்தங்கள் மாணவர்களின் உயிருக்கு அச்சுறுத்தலாக அமைய, மறுபுறம் அனர்த்தங்களைச் சாட்டி பாடசாலைகளை மூடும் அல்லது இணைக்கும் அரசாங்கத்தின் மறைமுகக் கொள்கைகள் மாணவர்களின் கல்வி உரிமையைக் கேள்விக்குறியாக்கியுள்ளன.



கடந்த சில தசாப்தங்களாகத் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் மத்தியில் உயர்கல்வி மீதான ஆர்வம் அதிகரித்துள்ளது. பெருந்தோட்டப் பகுதிகளில் இருந்து இன்று மருத்துவர்கள், பொறியியலாளர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உருவாகி வருகின்றனர். ஆரம்பத்தில் 'லயன்' அறைகளில் இயங்கிய பல பாடசாலைகள், இன்று ஓரளவு கட்டடம் மற்றும் ஆய்வுகூட வசதிகளைப் பெற்றுள்ளன. இந்த பின்னணியில் அரசாங்கத்தின் கொள்கை முடிவுகள் மலையக பாடசாலைகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற அச்சம் உருவாகியுள்ளது. அனர்த்தம் சார்ந்த அறிக்கைகளுக்கும் கள யதார்த்தத்துக்கும் இடையே பாரிய முரண்பாடு நிலவுகிறது.

சமீபத்தில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO) வெளியிட்ட அறிக்கையில், மத்திய மாகாணத்தில் அனர்த்தங்கள் காரணமாக எந்தவொரு பாடசாலையையும் இடமாற்றம் செய்ய வேண்டிய அவசியமில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், கல்வி அமைச்சின் தரவுகள் முற்றிலும் மாறுபட்ட ஒரு சித்திரத்தை வழங்குகின்றன. இதன்படி, மத்திய மாகாணத்தில் மட்டும் 47 பெருந்தோட்டப் பாடசாலைகள் மண்சரிவு அபாயத் தைக் கொண்டுள்ளன. மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் ஒட்டுமொத்தமாக 50 தமிழ் மொழி மூலப் பாடசாலைகள் தற்போதும் அபாயப் பட்டியலில் உள்ளன என்று அரசாங்கம் கூறுகிறது. அதிகாரிகளும் நிபுணர்களும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரடியாகச் சென்று கள ஆய்வு செய்யாமல் இவ்வாறான தகவல்களுடன் அறிக்கைகளை வெளியிட்டுள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. கள ஆய்வின்றி மேலோட்டமான அறிக்கைகளை வெளியிடுவது பிள்ளைகளின் உயிரோடு விளையாடும் செயலாகும் என்று ஆசிரியர் சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

## மாணவர் எண்ணிக்கை வீழ்ச்சியும் பாடசாலைகள் மூடப்படும் அபாயமும்



அரசாங்கத்தின் புதிய கல்வி மறுசீரமைப்பு கொள்கையின் படி, குறைந்த மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளை மூடுவது அல்லது அருகிலுள்ள பாடசாலைகளுடன் இணைப்பது ஒரு முக்கியப் பகுதியாகும். நாட்டில் 50க்கும் குறைவான மாணவர் எண்ணிக்கையை கொண்ட 1,506 (15%) பாடசாலைகளும், 100க்கும் குறைவான மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட 3,144 பாடசாலைகளும் காணப்படுகின்றன. இந்தநிலையில் இயற்கை அனர்த்தங்களை ஒரு கருவி யாகப் பயன்படுத்தி, இவ்வாறான சிறிய பாடசாலைகளை மூடுவதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாகச் சந்தேகங்கள் எழுந்துள்ளன. லெவெண்டன், சென் ஜோர்ன்ஸ், யொக்ஸ்போர்ட், கோணக்கலை, சோப்ரா மற்றும் கம்மதுவ போன்ற பல பாடசாலைகள் இவ்வாறான ஆபத்தான மற்றும் சீர்குலைந்த சூழலில் கல்வியைத் தொடரப் போராடுகின்றன. ஊடகவியலாளர் ஒருவர் மேற்கொண்ட ஆய்வில் இந்த பாடசாலைகள் குறித்த தரவுகள் வெளிப்பட்டுள்ளன.



குறித்த பாடசாலைகளை மூடுவதன் ஊடாக ஏற்பட போகும் கள யதார்த்தம் குறித்தும் அவதானம் செலுத்த வேண்டியுள்ளது. அரசாங்கத்தின் கொள்கையின் படி, பாடசாலைகள் இணைக்கப்படும்போது மலையக மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மிகக் கடினமானவை. அரசாங்கத்தின் தரவுகளின்படி கொள்கை வகுப்பாளர்கள் ஒரு பாடசாலையை மற்றொன்றுடன் இணைக்கும்போது, காட்டும் வரைபடத்தில் இரு இடங்களுக்கு இடையிலான தூரம் 1.5 கிலோமீட்டர் எனத் தெரிந்தாலும், கரடுமுரடான மலைப் பாதைகளில் மாணவர்கள் 6 கிலோமீட்டர் தூரம் வரை நடக்க வேண்டியுள்ளது.

இந்தப் பிரச்சினைகள் வெறும் கல்விப் பாதிப்புடன் நின்றுவிடுவதில்லை. இது உழைக்கும் வர்க்கமான தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கிறது. இந்தவிடயத்தில் பெற்றோர் மீதான தாக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்ல வேண்டியிருப்பதால், பெற்றோர்கள் தங்களின் அன்றாட வேலைக்குச் செல்ல முடியாமல் வருமானத்தை இழக்கின்றனர். முச்சக்கர வண்டிகள் செல்ல முடியாத பாதைகள் ஒருபுறமிருக்க, செல்லக்கூடிய இடங்களுக்கு மாதத்திற்கு சுமார் 5,000 ரூபாய் வரை செலவிட வேண்டியுள்ளது.

இது தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதாரத்திற்கு எட்டாத ஒன்றாகும். நீண்ட தூரம் காடுகள் மற்றும் தேயிலைத் தோட்டங்கள் வழியாகச் செல்வது மாணவர்களுக்கு உடல் ரீதியான சோர்வையும், குறிப்பாக பெண் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு குறித்த அச்சத்தையும் ஏற்படுத்துகிறது. இதுவே மாணவர் இடைவிலகலுக்கு நேரடி காரணியாகவும் அமைகிறது.



இந்த விடயங்களை கருத்திற் கொண்டு மலையக கல்வியை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைவரிடமும் காணப்படுகின்றது. மலையகக் கல்வியைப் பாதுகாக்க பல நடவடிக்கைகள் அவசியமானவை என்று முன்மொழியப் படுகிறது. இதன்படி, பல்கலைக்கழக நிபுணர்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளைக் கொண்டு மீண்டும் முறையான கள ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும்.

பாதுகாப்பான சூழலை உருவாக்கும் நோக்கில் பாடசாலைகளைத் தூர இடங்களுக்கு மாற்றுவதை விடுத்து, அதே தோட்டப் பகுதிக்குள் பாதுகாப்பான நிலத்தை ஒதுக்கி புதிய கட்டடங்களை நிர்மாணிக்க வேண்டும். 'நெருக்கமான பாடசாலை' என்பதைத் தூரத்தை வைத்து மட்டும் தீர்மானிக்காமல், நில அமைப்பு மற்றும் பயண நேரத்தைக் கருத்திற் கொண்டு கொள்கை ரீதியாக தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். கல்வி மறுசீரமைப்பு தொடர்பாக ஆசிரியர் சங்கங்கள் மற்றும் பெற்றோர்களுடன் அரசாங்கம் திறந்த மனதுடன் கலந்தா லோசிக்க வேண்டும்.

தற்போதைய நிலை தொடர்ந்தால், மலையகத்தில் கற்றல் இடைவெளி அதிகரித்து, தேசிய மட்டத்தில் மலையகப் பெருந்தோட்ட பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் பின்தள்ளப்படுவார்கள். குறிப்பாக மலையகக் கல்வியைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசியல் தலைமைகளுக்கும் உண்டு. எனவே இந்த விடயத்தில் மலையக மக்களின் பிரதிநிதிகளும் கள யதார்த்தத்தை

தொடர்ச்சி: பக்கம் 14




# இந்து இராஷ்டிராவை அமைப்பதன் அங்கமாகவே தமிழ் நாட்டின் பரந்துபட்ட மக்கள் திரள்களின் குடியுரிமையை பறிக்கும் சிறப்பு தீவிர திருத்தம்!

தமிழ் நாடு உள்ளிட்டு இந்தியாவெங்கும் வாக்காளர்கள் இடையே சிறப்பு தீவிர திருத்தம்(Special Intensive Revision - S.I.R.) கடந்த சில மாதங்களாக நடைபெற்று வருகிறது.



இந்தியாவின் வாக்காளர் பட்டியலில் அந்நியர்கள் ஊடுருவிவிட்டதால் அதை களையெடுக்கவே இது மேற்கொள்ளப்படுகிறது என்று ஆட்சியாளர்களால் இதற்கு நியாயம் கற்பிக்கப்படுகிறது.



இதே ஆட்சியாளர்கள்தான் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக இந்தியாவை ஆண்டுவருகின்றனர். இவர்களே இந்தியாவின் ஏகப் பெரும்பாலான மாநிலங்களையும் கடந்த பல ஆண்டுகளாக ஆண்டு வருகின்றனர்.

எனினும் இந்தியாவின் வாக்காளர் பட்டியலில் அந்நியர்கள் ஊடுருவி விட்டார்கள் என்று பூச்சாண்டி காட்டப்படுகிறது.

இந்தியாவின் வாக்காளர்களுக்கு இந்தியாவின் வாக்காளர்கள்தான் என்பதற்கு அவர்களுக்கு இந்தியாவின் தேர்தல் ஆணையம் வழங்கியிருக்கும் அடையாள அட்டையே செல்லாது என்று சட்டவிரோதமாக இந்தியாவின் தேர்தல் ஆணையமே தெரிவிக்கிறது.

இந்தியாவில் குடியுரிமையை பறிக்கும் வாக்காளர் களையெடுப்பு நடவடிக்கை இதற்கு முன் மேற்கொள்ளப்பட்டதில்லை.

குடியுரிமையை பறிக்கும் நோக்கில்தான் தேசிய மக்கள் தொகை பதிவேடு(N.P.R. - National Population Register), குடியுரிமை திருத்தச் சட்டம்(C.A. A. - Citizenship Amendment Act), தேசிய குடிமக்கள் பதிவேடு(N. R.C. - National Register of Citizens) ஆகியனவற்றை 2019ல் முன் னெடுத்தது இரண்டாவது தடவையாக ஆட்சிக்கு வந்த மோடி அரசாங்கம்.

இவற்றை எதிர்த்த போராட்டம் இந்தியாவெங்கும் 2019 டிசம்பரில் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே ‘கொரோனா’ பூச்சாண்டியால் மேற்காண் முன்னெடுப்புகளும் அவற்றை எதிர்த்த போராட்டமும்



நின்றன.

இம்முன்னெடுப்புகளின்போது இலட்சக்கணக்கான அசாம் இந்துக்கள் இந்தியர்கள் இல்லை என்றானது. அவர்கள் இந்துக்களாகவே/இந்தியர்களாகவே உண்மையில் இருந்தாலும்.

பாஸ்கர்

ஏனெனில் அவர்கள் இந்திய நிலப்பரப்பைச் சேர்ந்தோர் என்பதை நிரூபிப்பதற்கான ஆவணங்கள் அவர்களிடம் இல்லை. இருக்கவும் முடியாது. இதனால்




ஏராளமானோர் அந்நியர்கள் ஆக்கப்பட்டு தடுப்பு மையங்களில் அடைக்கப்பட்டனர்.

இதற்கிடையே கொரோனா பூச்சாண்டி 2021லிலும் தொடர்ந்தது. இப்பூச்சாண்டியை பற்றி கவலைப்படாமல் டெல்லியில் விவசாயிகள் போராட்டம் 2020ல் இறுதியில் தொடங்கி ஓராண்டு நடந்தது.

பின்னர் 2022ல் தொடக்கத்தில் நடந்த முக்கியமான உத்தரப் பிரதேச சட்டமன்றத் தேர்தலினாலும் அதே போல் முக்கியத்துவம் நிறைந்த ஏனைய சட்டமன்றத் தேர்தல்கள் சிலவற்றின் காரணத்தாலும் குடியுரிமை நீக்கம் தொடர்பான மேற்காண் முன்னெடுப்புகளை மேற்கொள்ளவில்லை.

2024ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மோடி வென்றாலும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை.



2019, 2024 ஆண்டுகளின் அவரது வெற்றி ‘திருட்டு’ வெற்றியே.

இது EVM(Electronic Voting Machine) மோசடி மூலம் பெற்ற வெற்றியே என்று அம்பலமானாலும் தேர்தல் ஆணையம்-உச்ச நீதிமன்றக் கூட்டுடன் காப்பாற்றப்

தொடர்ச்சி: பக்கம் 14



# 2025ம் ஆண்டில் உலகம் சந்தித்த மிக முக்கிய 10 நிகழ்வுகள்

## இறுதிப்பகுதி

தமிழில்: **ஜெயந்திரன்**

இந்த ஆண்டு (2025) பிறந்த பொழுது, கடந்த ஆண்டை விட (2024) இந்த ஆண்டு நம்பிக் கையைத் தருகின்ற ஆண்டாக மலரும் என்ற எதிர்பார்ப்பை வளர்த்தவர்களுக்கு ஏமாற்றத்தைத் தருகின்ற ஓர் ஆண்டாகவே இந்த ஆண்டு அமைந்திருக்கிறது. பன்னாட்டு ரீதியிலான கூட்டுறவு என்ற விடயத்தை உற்றுநோக்குகின்ற பொழுது கடந்த 12 மாதங்களும் சவாலான மாதங்களாகவே அமைந் திருக்கின்றன. இதற்கான காரணம் என்ன வென்றால் நாடுகளுக்கு இடையேயான போர்க ளும் மோதல்களும் இந்த ஆண்டில் மேலும் அதிகரித்திருப்பதுடன் அமெரிக் காவால் வழி நடத்தப்படும் உலக ஒழுங்கு ஒரு முடிவுக்கு வந்திருப்பது முக்கியமான விடயமாகும்.



கடந்த ஆண்டை (2024) மீட்டுப்பார்க்கின்ற பொழுது அழகிய பாரிஸ் மாநகரமும் அங்கே நடைபெற்ற கண்ணைக் கவரும் வண்ண நிகழ்வுகளைத் தன்னகத்தே கொண்ட பன்னாட்டு ஒலிம்பிக் போட்டியும் நாடுகளுக்கிடையேயான கூட்டுறவின் பலத்தை காட்சிப்படுத்தியது. இங்கே நாம் குறிப்பிடும் நிகழ்வுகள் தொடர்ந்து 2026ம் ஆண்டிலும் தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றன.

**10. கம்போடியாவுக்கும் தாய்லாந்துக்கும் இடையே ஏற்பட்ட மோதல்**

**9. கர்தினால் றொபேட் பிறெவோஸ்ட் 14வது லியோ என்ற பெயரில் திருத்தந்தையாகிறார்.**

**8. இந்திய - பாகிஸ்தான் மோதல்**

**7. தீவிரமடையும் செயற்கை நுண்ணறிவுப் போட்டி**

**6. தொடர்ந்து கொண்டிருக்கும் சூடானின் மிக மோசமான உள்நாட்டுப் போர்**

**5. காஸா தொடர்பாக அமெரிக்காவினால் முன் வைக்கப்படும் அமைதித்திட்டம்**



இரண்டு வருடங்களாக மிகக் கடுமையா கப் போரிட்ட பின்னர், கடந்த ஒக்ரோபர் மாதத் தில் இஸ்ரேலும் ஹமாசும் ஒரு போர்நிறுத் தத்துக்கு உடன்பட்டன. ஒரு வருடத்தில் மேற் கொள்ளப்பட்ட இரண்டாவது ஒப்பந்தம் இதுவா கும். பைடன் நிர்வாகத்தால் ஜனவரி மாதம் மேற் கொள்ளப்பட்ட போர்நிறுத்தம், காஸாவுக்கான மனிதநேய உதவிகளை அதிகரித்ததுடன், 33 பணயக்கைதிகளை ஹமாஸ் விடுதலை செய்ய வும் காரணமாக அமைந்தது மட்டுமன்றி இஸ்ரேல் 2000 பாலஸ்தீனச்சிறைக் கைதிகளை விடு தலை செய்தது. போர்நிறுத்தத்தை நீடிப்பதில் ஏற்பட்ட இணக்கமின்மை காரணமாக போர் நிறுத்தம் மார்ச் மாதத்துடன் முடிவுக்கு வந்தது.



ஒக்ரோபர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு அதிபர் ட்ரம்ப் காரணமாக இருந்தார். கட்டார், துருக்கி, எதிப்து ஆகிய நாடுகள் பேச்சுவார்த்தைக்கு உதவியளித்தன. ஒப்பமிடப்பட்ட ஒப்பந்தம், அமைதித்திட்டத்தை மூன்று கட்டங்களாகப் பிரித்திருந்தது. **1) உடனடிப் போர்நிறுத்தமும் அதனைத் தொடர்ந்து இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட நிலை களுக்குத் திரும்புதல். அத் துடன் பணயக் கைதிகள் மற்றும் சிறைக்கைதிகளின் பரிமாற்றம். 2) ஹமாஸ் போராளிகளின் ஆயுதங்களைக் களை தல். காஸாவின் நிலைமையை உறுதிப் படுத்த அங்கே ஒரு பன்னாட்டுப் படையை அனுப் புதல் 3) பாலஸ்தீன அரசாட்சியை மீண்டும் நிறுவுதலுடன் காஸாவை மீளவும் கட்டி யெழுப்புதல்.**

> **“அமைதிக்காலம் முடிவடையும் போது தான், அதன் பெறுமதியை உலகம் உணரத் தொடங்குகிறது.”**

முதலாவது கட்டம் முடிந்துவிட்டதாக அமெரிக்கா கருதுகிறது. ஆனால் இஸ்ரேலோ கடைசிப் பணயக் கைதி விடுவிக்கப்படும் வரை இரண்டாம் கட்டத்துக்குத் தான் செல்லமாட்டேன் என்கிறது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை காஸா அமைதித்திட்டத்துக்குத் தனது அங்கீகாரத்தை வழங்கியது மட்டுமன்றி, நிலைமை உறுதிப்படுத்த பன்னாட்டுப் படைக்கு அதிகாரமளித்தது. அதுமட்டுமன்றி காஸாவின் நாளாந்த ஆட்சியை மேலாண்மை செய் வதற்காக பாலஸ்தீன உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டது. இருப்பினும் நீடித்து நிலைக்கும் அமைதி இன்னும் எட்டப் படவில்லை. ஹமாஸ் ஆயுதங்களைக் களைவ தாகத் தெரியவில்லை. இஸ்ரேல் காஸாவில் தனது தாக்குதல்களை மீண்டும் தொடங்கியிருக்கிறது. பன்னா ட்டு உறுதிப்படைக்கு படைகளை தமது படைகளை அனு ப்புவதாக எந்தவொரு நாடும் இதுவரை அறிவிக்கவில்லை.

**4. இழுபட்டுச் செல்லும் உக்ரேன் போர்**

உக்ரேன் நாட்டில் நடைபெற்று வரும் போர், 2025 இல் நான்காவது ஆண்டுக்குள் நுழைந்துவிட்டது. ரஷ்யா தனது ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானத் தாக்குதல்களை அதிகரித்திருப்பதுடன் உக்ரேனிய நகரங்களைத் தொடர் ந்து தாக்கி, பொதுமக்களைக் கொன்று வருவதுடன், அப் பாவி மக்களை அதிகமாகக் கொன்று உட்கட்ட மைப்பைத் தொடர்ந்தும் சேதப்படுத்தி வருகிறது. மார்ச் மாதத்தில் தனது குர்ஸ்க் மாகா ணத்தை மீளவும் தனதாக்கிக் கொண்டது. 2024இல் இப்பிரதேசத்தை ஆச்சரியத்துக்கு உரிய விதத்தில் உக்ரேன் கைப்பற்றியிருந்தது. ஆனால் உக் ரேனுக்குள் ரஷ்யாவின் நகர்வு குறைவாகவே இருந்தது. ரஷ்யாவோ உக்ரேன் பிரதேசத்தின் கட்டுப்பாட்டை ஒரு வீதத்துக்கும் குறைவான அளவில் கட்டுப்படுத்தியது. இவ்வாறான வெற்றிகள் பெரும் விலை கொடுத்தே பெறப் பட்டன. உதாரணமாகத் தினமும் ஆயிரம் சிப்பாய்களை ரஷ்யா இழந்து வந்தது. உக்ரேனின் இழப்புகள் மிகவும் குறைவாகவே இருந்தன.



ஆனால் உக்ரேனின் சனத்தொகை ரஷ்யா வின் மூன்றில் ஒரு பகுதிக்கு சமனானதாகும். ‘ஒப்ரேஷன் சிலந்திவலை’ என்ற தாக்குதலை ஜூன் மாதத்தில் தொடுத்து உக்ரேன் உலகைத் திகைக்க வைத்தது. ஆளில்லா விமானங்களால் ரஷ்யாவுக்குள் ஆள ஊடு ருவி மேற் கொள்ளப்பட்ட இத்தாக்குதல்களின் போது, 5 விமானத்தளங்கள் தாக்கப்பட்டன. இருப்பினும் இத் தாக் குதல்கள் போரின் போக்கை எந்தவிதத்திலும் மாற்ற வில்லை. ரஷ்யாவாலும் உக்ரேனாலும் இன்னும் எவ்வளவு காலம் தொடர்ந்து போரிட முடியும் என்று நிபுணர்கள் வாதிடுகிறார்கள். இதில் உக்ரேனுக்குத் தான் அதிக ஆபத்து இருக்கிறது.

வெற்றியடைவதற்கு வேண்டிய அட்டை கள் உக்ரேனிடத்தில் இல்லை என்று அதிபர் டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்திக் கூறுகிறார். உக்ரேனுக்குத் தொடர்ந்து உதவி அளிப்பதில் அவருக்கு உடன்பாடு இல்லை. கீவுக்கு ஐரோப்பா நிதி மற்றும் இராணுவ உதவிகளை வழங்கி வருவதுடன் 105 பில்லியன் டொலர் பெறுமதியான கடனை உக்ரேனுக்கு வழங்குதவதாக 2025இன் இறுதி யில் சம்மதித்திருக்கிறது. அடுத்த இரண்டு வருடங்களில் உக்ரேனின் நிதித்தேவையின் மூன்றில் இரண்டு பகுதிகள் அதிலிருந்து வழங்கப்படும். ஒரு போர்நிறுத்தத்தை ஏற்றுக் கொள்ள வொளோடிமீர் செலன்ஸ்கியை ட்ரம்ப் வற்புறுத்திவருகிறார். ஆனால் அவ்வா றான போர்நிறுத்தம் ரஷ்யாவுக்கு அதிகம் சாதக மானது என்று நிபுணர்கள் கருதுகிறார்கள். அப்படியிருந்தும் கூட ரஷ்ய அதிபர் விளாடி மீர் புட்டின் இன்னும் அதிகமாக எதிர்பார்க்கிறார்.

**தொடர்ச்சி: பக்கம் 16**




வேல்ஸில் இருந்து **அருஸ்**

போரும் அமைதியும் என கடந்து சென்ற 2025 ஆம் ஆண்டு நிரந்தர அமைதியை இந்த உலகிற்கு விட்டுச் செல்லவில்லை. மாறாக மீண்டும் வெடிக்க கூடிய ஒரு கொதிநிலையிலான உலகத்தை எமக்கு பரிசளித்துச் சென்றுள்ளது. இராஜதந்திர, பொருளாதார, படைத்துறை மற்றும் அரசியல் ரீதியாக உலக நாடுகள் ஒரு உறுதியற்ற நிலையிலேயே உள்ளன. 2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட உக்ரைன் ரஸ்ய போர் இந்த ஆண்டும் தொடரும் சாத்தியங்களே உள்ளது.




வருடம் பிறந்த பின்னர் உக்ரைன் மேற்கொண்ட தாக்குதல்களில் 25 இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர், அமெரிக்க அதிபர் மேற்கொண்ட அமைதி முயற்சிகளும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் நடவடிக்கையால் தனது இலக்கை எட்டவில்லை.எனவே உக்ரேனிய மோதல் உட்பட மூலோபாய விஷயங்களில் வாஷிங்டனுக்கும் பிரஸ்ஸல்ஸுக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகளின் விளைவாக, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பங்களிப்பு இல்லாமல் 2026 இல் ரஷ்யாவுடனான ஒப்பந்தத்தை அமெரிக்க அரசாங்கம் முடிக்க முடியும் என ஹங்கேரிய பிரதமர் விக்டர் ஓர்பன் தனது புதுவருட செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள், குறிப்பாக இலையுதிர் காலம் மற்றும் ஆண்டின் இரண்டாம் பாதியில் போர்நிறுத்தத்தை எட்டுவதற்கான வாய்ப்பு உள்ளதுஎன உக்ரைனின் ஆயுதப்படைகளின் முன்னாள் பொதுப் பணியாளர்களின் துணைத் தலைவர் ரோமானென்கோவும் அதனை உறுதிப்படுத்தியுள்ளார்.உக்ரைனின் ஒடிசா துறைமுகத்தை ரஸ்யா பெருமளவில் செயலிழக்க செய்துள்ளது. அது உக்ரைனின் பொருளாதாரத்தை முற்றாக வீழ்ச்சிடையச் செய்யலாம், எனவே உக்ரைனை முற்றாக பொருளாதார மற்றும் படைத்துறை ரீதியாக தாங்கிப் பிடிக்கும் சக்தி மேற்குலகத்திடம் இல்லை.



அவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டால் அது ஐரோப்பாவுக்கு மிகப்பெரும் பின்னடைவாக இருக்கும் என்பதுடன், 2026 ஆம் ஆண்டு அதன் வீழ்ச்சி ஆண்டாகவும் மாறலாம்.2026 ஆம் ஆண்டு இடைக்கால தேர்தலில் குடியரசுக் கட்சிக்கு தான் நிதிஉதவி அளிக்கவுள்ளதாக TESLA நிறுவனத்தின் தலைவரும், உலகின் முதலாவது செல்வந்தருமான இலோன் முஸ்க் தெரிவித்துள்ளதுஎன்பது, இந்த ஆண்டு அமெரிக்க அதிபரின் நிலை மேலும் உறுதிப்படவே வாய்ப்புள்ளது.எனவே ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் உள்ள விரிசல்கள் மேலும் அதிகரிக்கலாம்.

2026 ஆம் ஆண்டு பால்டிக்ஸை விரைவாகக் கைப்பற்றும் ஆண்டாக இருக்கும், நாம் ஐரோப்பாவில் வலிமையான இராணுவத்தின் கட்டுமானத்தை துரிதப் படுத்துவோம் என்று போலந்து பிரதமர் டஸ்க் தனது புத்தாண்டு உரையில் தெரிவித்துள்ளார். ரஷ்யாவுடனான பின்லாந்தின் உறவுகள் மாறிவிட்டன. அமெரிக்காவுடனான உறவுகளும் மாற்றங்களுக்கு உள்ளாகி வருவதாகவும், பின்லாந்தின் பாதுகாப்புத் திறன்களை உறுதி செய்வதில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோவின் முக்கியத்துவத்தை பின்லாந்து அதிபர் அலெக்சாண்டர் ஸ்டுப் தனது புத்தாண்டு உரையில் வலியுறுத்தியுள்ளார். அதேசமயம், பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் ரஸ்யாவுடனான போருக்கு இரகசியமாக தம்மை தயார் படுத்துவதாக அமெரிக்க ஊடகம் தெரிவித்துள்ளது.

ஆனால் இவற்றுக்கு எல்லாம் ஒற்றைவரியில் பதிலளித்துள்ளார் ரஸ்ய அதிபர் விளமிடீர் பூட்டீன். அதாவது பிரான்ஸ் ரஷ்யாவுக்கு எதிராகப் போருக்குச் சென்றால், அது வரலாற்றில் இடம் பிடிக்கும், ஆனால் பூமியின் வரைபடத்தில் இருந்து அகற்றப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.




2026 ஆம் ஆண்டில் மேற்குக் கரை (பாலஸ்தீன ஆணையம்), லெபனான் மற்றும் ஈரானுக்கு எதிராக இஸ்ரேல் புதிய போர்களில் ஈடுபடும் என்று ஒரு கணிப்பை இஸ்ரேலிய தொலைக்காட்சி சேனல் 12, மூத்த அரசாங்க அதிகாரிகளை மேற்கோள் காட்டிதெரிவித்துள்ளது. அதனை உறுதிப்படுத்துவதுபோலவே ஏடன் வளைகுடாவில் ஏமன் குதீஸ் அமைப்பினரின் இடத்தில் இருந்து 200 மைல்கள் தொலைவில் உள்ள சோமாலிலாந்தை இஸ்ரேல் அங்கீகரித்துள்ளது. இது மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகளில் போர்ப் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

வருடத்தின் ஆரம்பத்தில் ஈரானில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சிக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியை இஸ்ரேலிய புலனாய்வுத்துறை ஊக்குவிப்பதாக ஈரான் குற்றம் சுமத்திவரும் வேளை ஈரான் மக்களை காப்பாற்ற அமெரிக்க உதவும் என அமெரிக்க அதிபர் தெரிவித்துள்ளதும், போருக்கான சமிக்கையே.அதேசமயம் ஈரனை பலப்படுத்தும் முகமாக கடந்த 48 மணி நேரத்தில் குறைந்தது நான்கு Belarusian Il-76 போக்குவரத்து விமானங்கள் தெஹ்ரானில் தரையிறங்கியுள்ளன, மேலும் அவை ரஷ்ய மற்றும் சீன இராணுவ சரக்குகளை ஏற்றிச் சென்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

காசாவில் ஏற்படுத்தப்பட்ட போர் நிறுத்தமும் முழுமையான அமைதியை கொண்டுவரவில்லை. இஸ்ரேலின் தொடர் தாக்குதல்களில் மக்கள் இறக்கின்றனர், அங்கு மீள் கட்டுமானம் இல்லை, மேலும் அங்குள்ள 30 உதவி நிறுவனங்களை இஸ்ரேல் தடை செய்துள்ளது.

ஆபிரிக்காவில் சூடான் மிகவும் முக்கியமான மோதல் புள்ளிகளில் ஒன்றாக உள்ளது, அங்கு உள் மோதல்கள், மனிதாபிமான நெருக்கடி மற்றும் தங்கம் போன்ற வளங்கள் மீதான போட்டிகள் அதிகரித்து வருகின்றன. இது அந்த பிராந்தியத்தை மேலும் சீர்குலைக்கலாம். நைஜீரியா மீதான அமெரிக்காவின் வான் தாக்குதலும், உலகில் உள்ள கிறிஸ்த்தவர்களை பாதுகாக்கப்போவதாக அமெரிக்காவும், இஸ்ரேலும் தெரிவித்துவரும் கருத்துக்களும் இந்த ஆண்டு மதங்களுக்கு இடையிலான போரை மேலும் விரிவுபடுத்தலாம்.



கருபியன் கடல் பகுதியில் மிகவும் நெருக்கடியான பாதுகாப்பு பிரச்சினையாக வெனிசுலா போதைப்பொருள் கடத்தல்காரர்கள் என்று கூறப்படுபவர்களுக்கு எதிராக டிரம்ப் நிர்வாகம் இராணுவப் படையைப் பயன்படுத்துவதுதான். வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவை பதவி நீக்கம் செய்வதான மிரட்டல்களை நிர்வாகம் பின்பற்றினால், பிராந்திய பாதுகாப்பிற்கான விளைவுகள் அதிர்வு மிகுந்ததாக இருக்கும்.

சீனா மற்றும் தைவானின் ஒன்றிணைவு தவிர்க்க முடியாதது மற்றும் தடுக்க முடியாதது என்று தனது புத்தாண்டு உரையில், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தெரிவித்துள்ளார். பெய்ஜிங் தீவை அதன் சொந்த பிரதேசமாகக் கருதுகிறது மற்றும் கட்டுப்பாட்டை மீண்டும் பெற தயாராக உள்ளது என்பதற்கான மற்றொரு பொது நினைவூட்டல் இது. அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையே தைவான் ஒரு முக்கிய மோதல் புள்ளியாக உள்ளது.



ஒரே சீனா கொள்கையை அங்கீகரித்த போதிலும், வாஷிங்டன் தீவுக்கு ஆயுதங்களை வழங்குகிறது மற்றும் அதன் உண்மையான சுதந்திரத்தை ஆதரிக்கிறது. தைவான் ஜலசந்தியில் ஏற்படும் எந்தவொரு பதற்றமும் உலகளாவிய குறைக்கடத்தி விநியோகச்சங்கிலிகளைபாதிக்கும்,உலகின் பாதிக்கும் மேற்பட்ட சில்லுகள் தீவில் தயாரிக்கப்படுகின்றன. இது மேற்கத்திய தொழில்நுட்ப நிறுவனங்கள், ஆட்டோமொபைல் தொழில் மற்றும் பாதுகாப்புத் தொழில்களுக்கு நேரடி ஆபத்தை ஏற்படுத்துகிறது. அடுத்த ஆண்டே தாய்வனை சீனா கைப்பற்றும் என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் கணிப்பு.கடந்த வாரம் தாய்வனை சுற்றி சீனா மேற்கொண்ட மிகப்பெரும் படை ஒத்திகை இந்த ஆண்டும் அங்கு பதற்றமான நிலையே காணப்படும் என்பதை காட்டுகின்றது.

மேலும் ஆசிய பிராந்தியத்தில் கம்போடிய - தாய்லாந்து போர் தொடர்ந்து வருகின்றது. இஸ்ரேல் தாய்லாந்தை பலப்படுத்துவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. அதேசமயம், அப்கானிஸ்தானில் அமெரிக்காவின் MQ-9 Reaper drone விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. அமெரிக்காவின் இந்த விமானம் பாகிஸ்தானில் இருந்து சென்றதா என்ற கேள்விகளும் எழுந்துள்ளன. அவ்வாறு இருந்தால் இந்த வருடத்தில் ஆப்கானுடனான ஒரு

**தொடர்ச்சி: பக்கம் 14**

## தையிட்டி... தொடர்ச்சி...

என கோரி பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த மக்களின் போராட்டம் நியாயமானது. இதனால் தான் இந்த காணிகளை விடுவிக்க வேண்டும் என நான் குரல் கொடுத்தேன். அதன் பிறகு யாழ்ப்பாண நாக விகாரை விகாரதிபதியும் எனது கருத்தோடு ஒத்த கருத்தை தெரிவித்தார்.

அதனை தொடர்ந்தே தையிட்டி விகாரதிபதியும் ஊடக சந்திப்பினை மேற்கொண்டு, புதிய கட்டு மானங்களை கட்ட மாட்டேன் என்றும் கூறியுள்ளார். பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட காவல்துறை அதிகாரிகளிடமும் நான் கேட்டுக்கொள்வது. காணியை இழந்த இந்த மக்களின் போராட்டத்திற்கு எதிராக வழக்குகள் போடுவதனை நிறுத்த வேண்டும்.

இந்த மக்கள் தமது காணிகளை இழந்து வீதிகளில் நின்று போராடுகிறார்கள். அவர்களுக்கு காணிகளை கையளித்தால், அவர்கள் போராட மாட்டார்கள் எனவே காவல்துறையினர் போராட்டங்களுக்கு தடை செய்யாது. போராடுபவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என தெரிவித்தார்.

## நத்தார் விடுமுறை... தொடர்ச்சி...

பொறுப்பேற்கவேண்டியதொகை.கொள்ளையடிக்கப்பட்ட தரப்பினருக்கு ஏற்பட்ட உண்மையான சேதம் நிச்சயமாக மூன்று இலக்க மில்லியன் வரம்பில் உள்ளது. அதாவது 300 மில்லியன் டொலர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

## இந்து இராஷ்டிரா ... தொடர்ச்சி...

படுகிறது.

EVM மோசடி வெற்றிக்குப்/திருட்டு ஓட்டுக்குப் (இதையும் இராகுல் காந்தி அம்பலப்படுத்திவிட்டதாலும்) பதிலாக வாக்காளர் உரிமை பறிப்பினால்தான் தனது வெற்றி நிரந்தரமாக சாத்தியம் என்றே மேற்காண் S.I.R.ஐ கொண்டு வந்துள்ளது மோடியின் இந்துத்துவப் பாசிச அரசு.

இந்த S.I.R. என்பது இந்துத்துவப் பாசிசக் கும்பல் ஏற்கனவே கொண்டிருக்கும் இந்துத்துவப் பாசிசக் கொள்கைக்கு ஒத்துப் போகிறது. அதாவது பெரும்பான்மையான மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதே அது.

நாடாளுமன்ற ஜனநாயகத்தை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளாத கும்பலே இந்துத்துவப் பாசிசக் கும்பல் ஆகும். அதனால் அது S.I.R. வடிவத்தில் பெரும் பான்மையான மக்களின் வாக்குரிமையை பறிக்கிறது. அது நிரூபணமாகும் வகையில் தமிழ் நாட்டில் மட்டும் சுமார் ஒரு கோடி(97 இலட்சம்}வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

வாக்குரிமைப் பறிப்பில் மதச் சிறுபான்மையினர், தலித்துகள், பழங்குடியினர், பெண்கள், தொழிலாளர்கள் ஆகியோரே முதன்மையாகப் பாதிக்கப்படுவோர் ஆவர். இதுவும் இந்துத்துவப் பாசிசக் கருத்தியலின் அங்கம்.

இதன் தவிர்க்கவியலா நீட்சியே வாக்குரிமைப் பறிப்பின் வாயிலாக குடியுரிமையை பறிப்பதும் ஆகும். அதாவது வாக்காளர் பட்டியலில் இடமில்லாதோருக்கு குடியுரிமையும் இல்லை.

நாடாளுமன்ற ஜனநாயகம் இல்லாத கடந்த ஈராயிரம் ஆண்டு கால ஆட்சி சிறிய இடைவெளி(1950/1952-முதல் இன்றுவரை)விட்டு தொடங்குகிறது.

இதன் அங்கமாக இனி ஈழச் சிக்கல் போன்றவை தேர்தல் நேர பேசுபொருளாகவும் இருக்காது.

## தமிழ் ஆயுத ஒட்டுக்குழு ... தொடர்ச்சி...

திட்டத்தில் முடக்கப்பட்டு வாழ்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே போல் 1994 ஆகஸ்ட் 16 தொடக்கம் 2024 செப்டம்பர் 24 வரை 30 வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் தமிழ்தேசிய அரசியல் விரோதியாகவும்,தமிழ் ஆயுத ஒட்டுக்குழு தலைவராகவும் ஜனாதிபதிகளான சந்திரிகா, மகிந்த, மைத்திரி, கோட்டா, ரணில் வரை 05 ஜனாதிபதிகளுடன் பணிபுரிந்து ஈபிடிபி கட்சி தலைவர் டக்ளஸ் தேவானந்தா கடந்த 26/12/2025 ஆம் திகதி குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டார்.

2001ஆம் ஆண்டு அவரது தனிப்பட்ட பாவனைக்காக இராணுவத்தினால் வழங்கப்பட்ட துப்பாக்கி ஒன்று 2019 ஆம் ஆண்டு திட்டமிட்ட போதைவஸ்து கடத்தல் குற்றவாளியான மாகந்துர மதூஷிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கண்டெடுக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய விசாரணைகளுக்காகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எப்படியான ஜனநாயகம் ஆயுத ஒட்டுக்குழுக்களை தமிழினப்படுகொலைகளுக்கு பயன்படுத்தி அரசியல் கட்சிகளாக இணைத்து ஆளும் சிங்கள ஜனாதிபதிகள் ஆயுதங்களுடன் அவர்களை தேர்தலில் வெற்றி பெற வைத்து முதல மைச்சர். இராஜாங்க அமைச்சர், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்க ளாக நியமித்து அழகு பார்த்த நாடு இலங்கை என்பதை மனித உரிமை அமைப்புகள் ஏன் கண்டுகொள்ளவில்லை இது ஜனநாயகமா? அல்லது சர்வாதிகாரமா?

• • •

## டிட்வா புயல்... தொடர்ச்சி...

கிராம அலுவலர்கள் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் இன்னும் தங்கள் கவலைகளை நிவர்த்தி செய்யவோ அல்லது இழப்பீடு எப்போது வழங்கப்படும் என்பதைக் குறிப்பிடவோ இல்லை என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தகவல்களின்படி, 7,781 குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் 24,431 பேர் இன்னும் 264 மையங்களில் தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது

## இந்திய பாகிஸ்தான்... தொடர்ச்சி...

நிலைப்பாட்டை எடுத்துள்ளோம். மேலும் மோதல்கள் மற்றும் மூல காரணங்கள் இரண்டையும் நிவர்த்தி செய்வதில் கவனம் செலுத்தியுள்ளோம்,". "சூடான பிரச்சினைகளைத் தீர்ப்ப தற்கான இந்த சீன அணுகுமுறையைப் பின்பற்றி, வடக்கு மியான்மர், ஈரானிய அணுசக்தி பிரச்சினை, பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பதட் டங்கள், பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் இடையேயான பிரச்சினைகள் மற்றும் கம்போடியா மற்றும் தாய்லாந்து இடையேயான சமீபத்திய மோதல் ஆகியவற்றில் நாங்கள் மத்தியஸ்தம் செய்தோம் என தெரிவித்துள்ளார்.

தெற்காசிய அண்டை நாடுகள் மே 7-10 வரை நீடித்த ஒரு இராணுவ மோதலில் ஈடுபட்டன. இது போர் நிறுத்தத்தில் முடிந்தது.

இந்தியாவும் பாகிஸ்தானும் போர் நிறுத்தத்தை அறிவிப்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு, வாங் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலுடன் ஒரு தொலைபேசி உரையாடலை நடத்தினார், அங்கு சீன வெளியுறவு அமைச்சர் தெற்காசிய அண்டை நாடுகள் தங்கள் வேறுபாடுகளை "உரையாடல் மற்றும் ஆலோசனை" மூலம் கையாள வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

அன்றைய தினம் பாகிஸ்தான் பிரதமர் முகமது இஷாக் தரிடமும் வாங் பேசினார். சீனா முன்கூட்டியே போர் நிறுத்தத்தை ஆதரிப்பதாக அவர் அவரிடம் கூறினார். "போர் நிறுத்தம் ஏற்பட்டவுடன், மோதல் மீண்டும் ஏற்படாமல் தடுக்க அதை கூட்டாகக் கடைப்பிடிக்க வேண்டும்" என்று வாங் கூறியதாக சீன வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. "இது பாகிஸ்தான் மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளின் நலன்களுக்கும் உகந்தது, பிராந்திய அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு தேவை, மேலும் சர்வதேச சமூகத்தின் பொதுவான எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்கிறது. இந்த விஷயத்தில் சீனா தொடர்ந்து நேர்மறையான பங்கை வகிக்கத் தயாராக உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், அணு ஆயுதம் ஏந்திய இரு நாடுகள் இடையேயான போர் நிறுத்தத்தை ஏற்படுத்தியதற்காகவும், அவர்களுடனான வர்த்தகத்தைக் குறைப்பதாக அச்சுறுத்துவதன் மூலம் அதனை எட்டியதாகவும் தெரிவித்திருந்தார். அனால் புது தில்லி ட்ரம்ப் கூற்றுக்களை மறுத்துள்ளது.

## 2026 ஆம் ஆண்டில் ... தொடர்ச்சி...

போருக்கு அமெரிக்கா பாகிஸ்தானை தயார்படுத்தி வருகின்றதா என்ற கேள்விகளும் எழுந்துள்ளன.

அதேநேரம், அண்மையில் காலமான வங்களா தேசத்தின் முன்னாள் பிரதமர் பேகம் கலீதா ஜியாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்த டாக்காவில் மில்லியன் கணக்கான வங்கதேச மக்கள் கூடியதும், அங்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் சென்று பேகத்தின் மகனும்,17 வருடங்கள் பிரித்தானியாவில் தலைமறைவாக வாழ்ந்தவருமான ரஹ்மானை சந்தித்ததும், பாக்கிஸ்தான் நாடாளுமன்ற பேச்சாளரை சந்தித்து பேசியதும், தென்னாசியாவில் ஏற்பட்டுவரும் படைவலு மற்றும் அரசியல் மாற்றங்களை உறுதிப்படுத்துகின்றது. அதுஇந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கைகளில் அதிக மாற்றம் நிகழலாம் என்ற எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இறுதியாக இந்த ஆண்டு இலங்கை வான்படைக்கு அமெரிக்கா தன்னிடம் உள்ள மேலதிகமான 10 TH-57 (பெல் 206) உலங்குவானூர்திகளை நன்கொடையாக வழங்குகிறது. பல்நோக்கு தகமை கொண்ட இந்த விமானங்கள் கண்காணிப்பு முதல் பொது பயன்பாடு வரை பல்வேறு பாத்திரங்களை வகிக்கலாம். மேலும் இலங்கை வான்படையை பலப்படுத்தும் நோக்கத்துடன் இரண்டு சி-130 கெர்கூல்ஸ் விமானங்களையும் வழங்கவுள்ளது. அதாவது அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான படைத்துறை ஒத்துழைப்புக்களின் மைல் கல்லாக இதனை பார்க்கலாம். எனவே இந்த வருடம் இலங்கை விவகாரமும் தென்னாசியப் பிராந்தியத்தில் முக்கிய பேசுபொருளாகும்.

• • •

## அவசரகாலநிலை... தொடர்ச்சி...

பிரகடனப்படுத்தப்பட்டது.

அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டு ஒரு வாரகாலத்தின் பின்னர் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு, ஜனாதிபதியையோ அல்லது அரசாங்கத் தையோ விமர்சிப்போருக்கு எதிராக அவசரகாலப் பிரகடன வழி காட்டல்கள் பிரயோகிக்கப்படும் என அரசாங்கத்தின் பிரதிநிதிகளால் வெளியிடப்பட்ட பொது அறிவிப்புக்கள் குறித்து தீவிர கரிசனையை வெளிப்படுத்தியிருந்தது.

அதுமாத்திரமன்றி அவசரகாலச்சட்ட விதிகளின் முறையான பிரயோகம் குறித்தும் அக்கடிதத்தில் விரிவாக விளக்கமளித்திருந்தது. இவ்வாறானதொரு பின்னணியில் நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு ஏற்கனவே பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால நிலையை மேலும் கால நீட்டிப்பு செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியின் செயலாளர்க. கலாநிதி நந்திக சனத் குமநாயக்கவின் கையொப்பத்துடன் மீண்டும் வெளியிடப்பட்டது.

இந்நிலையில் தங்களின் அவதானிப்புகள் உள்வாங்கப்படவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உறுப்பினர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். அதுமாத்திரமன்றி ஏற்கனவே வெளியிடப்பட்ட அதே வழிகாட்டல்களே தற்போது மீண்டும் காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தங்கத்திற்காக... தொடர்ச்சி...

சூடான் பவுண்டுகளை (சுமார் $426 மில்லியன்) எட்டியதாகவும், இது ஆண்டு இலக்கில் 132% ஆகும் என நிறுவனம் தெரிவித்துள்ளது.

கனிம அமைச்சர் நூர் எல்-டேம் தாஹா தலைமையில் நடைபெற்ற நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவின் கூட்டத்தின் போது இந்த புள்ளிவிவரங்கள் வழங்கப்பட்டனஇ அவர் தொடர்ச்சியான சவால்கள் என்று விவரித்த போதிலும் நிறுவனத்தின் செயல்திறனைப் பாராட்டினார். "சாதனைகளின் பாதையைத் தொடர 2026 ஆம் ஆண்டில் முயற்சிகளை இரட்டிப்பாக்க தேசிய சுரங்க மேம்பாட்டுத் திட்டங்கள் இணைக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

ஜனவரி முதல் அக்டோபர் 2025 வரை, SMRC 53 டன் தங்கத்தை உற்பத்தி செய்ததுஇ இது கூ909 மில்லியனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. கிழக்கு ஆப்பிரிக்க நாடு இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு கொடூரமான உள்நாட்டு மோதலில் மூழ்கியிருந்த போதிலும் இந்த அதிக புள்ளிவிவரங்கள் எட்டப்பட்டுள்ளது. சூடானின் மிகவும் மதிப்புமிக்க பொருட்களில் ஒன்றாக தங்கம் உள்ளது, தற்போதைய மோதல் இருந்தபோதிலும், 2024 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் தங்க ஏற்றுமதி $1.5 பில்லியனுக்கும் அதிகமாக ஈட்டியதாக அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

சுவிஸ் நிறுவனமான SWISSAID இன் படி, 2024 ஆம் ஆண்டில் அதிகாரப்பூர்வ தங்க ஏற்றுமதி தோராயமாக 22.9–31 டன்களாக இருந்தது, இது தோராயமாக கூ1.57–1.59 பில்லியன் வருவாயை ஈட்டியது. இருப்பினும், தங்க உற்பத்தியில் கணிசமான பகுதி – 40% முதல் 70% வரை மதிப்பிடப்பட்டுள்ளது - முறையான அறிக்கையிடல் முறைக்கு வெளியே, அதிகாரப்பூர்வமற்ற வழிகள் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

உலக சந்தைகளில் சூடான் தங்கம் நுழைவதற்கு முக்கிய இடைத்தரகராக ஐக்கிய அரபு அமீரகம் அதிகாரப்பூர்வ மற்றும் அதிகாரப்பூர்வமற்ற தங்க ஏற்றுமதிகளுக்கு முதன்மை மையமாக செயல்படுகிறது என்று பல ஆதாரங்கள் தெரிவித்துள்ளன.

## மலையகக் கல்விப் ... தொடர்ச்சி...

வெளிப்படுத்த வேண்டும்.

அனர்த்தங்கள் இயற்கையானவை என்றாலும், அவற்றைச் சாட்டி ஒரு சமூகத்தின் கல்வி உரிமையைப் பறிப்பது செயற்கையான அனர்த்தமாகும். மலையக மாணவர்களின் கல்வி எதிர்காலத்தை உறுதிப்படுத்த அரசாங்கம் வெளிப்படையான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதோடு, யதார்த்தமான தீர்வுகளை வழங்க முன்வர வேண்டும்.

கல்வி என்பது ஒரு சலுகையல்ல, அது சகல பிள்ளைகளினதும் அடிப்படை உரிமை. இயற்கை அனர்த்தங்கள் ஒரு தற்காலிக சவால்தான், ஆனால் திட்டமிடப்படாத கொள்கை முடிவுகள் ஒரு நிரந்தரப் பேரழிவாகும். மலையக மாணவர்களின் கல்விப் பாதையில் உள்ள சவால்களை அகற்ற அரசாங்கமும், சிவில் அமைப்புகளும், அரசியல் தலைமைகளும் ஒன்றிணைய வேண்டும். 'யாவருக்கும் சமமான கல்வி' என்பது நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு மட்டும் சொந்தமானதாக இருக்கக் கூடாது. அது தேயிலைத் தோட்டத்து மலைகளுக்கும் சென்றடைய வேண்டும்.

• • •

## இலக்கின் தேடலில் ... தொடர்ச்சி...

திராய்க்கேணிப் படுகொலை மற்றும் நிந்தவூரில் இடம் பெற்ற படுகொலை உள்ளிட்ட முக்கிய தகவல்களையும் இணைத்திருப்பதோடு அழிக்கப்பட்ட ஆலயங்கள், அபகரிக் கப்பட்ட பிரதேசங்கள், கிராமங்கள், போன்ற அவல நிலைகளையும் ஆவணப்படுத்தி வர்ணப் படங்கள் உள் ளிட்ட 203 பக்க ஆவணமாக வெளிப்படுத்தி இருக்கிறார் ஆய்வாளர்.

இந்நூலுக்கான ஆசியுரையினை மட்டக்களப்பு காயத்திரிபீட முதல்வர் சைவப் புலவர், கலாபூஷணம், சிவயோகச் செல்வன் சாம்பசிவம் சிவாச்சாரியார் அவர்க ளும், மதிப்புரையினை கல்முனை தமிழ்ச் சங்கச் செயலாளர் திரு.ச.ரகுவரன் அவர்களும்,அணிந்துரையினை வரலாற்று ஆய்வாளர் கலாநிதி. திரு.என்.கே.எஸ்.திருச்செல்வம் அவர்களும், வழங்கியுள்ளதோடு, நூலிற்கான வாழ்த்து ரையினை வழங்கியதோடு இந்நிகழ்வில் கலந்து கொண்டு நூல்வெளியீடும் செய்திருந்தார் தமிழ்நாட்டைச் சேர்ந்த வரலாற்று ஆய்வாளர் திரு.வேல்கடம்பன் அவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இப்புத்தக வெளியீட்டு நிகழ்வின் அதிதி களாக யாழ் மாவட்ட நாடாளுமன்ற கௌரவ.திரு.சி ஸ்ரீதரன், மட்டக்களப்பு மாவட்ட கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்கள் கௌரவ திரு. ஞா.ஸ்ரீ நேசன் மற்றும் கௌரவ வைத்தியர் ஸ்ரீநாத் அவர்களும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ க. கோடீஸ்வரன் அவர்களும் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அரியநேந்திரன் அவர்களும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் திரு.மு. ராஜேஸ்வரன் அவர்களும் பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உப-தவிசாளர்கள், உறுப் பினர்கள், முன்னாள் தவிசாளர்கள், முதல்வர்கள் மற்றும் அரச உயர் அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள், அமைப்புகளின் பிரதிபதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து சிறப் பித்தனர்.

இவ்வரலாற்றுஆய்வுநூலினைதமிழ்நாட்டிலிருந்து வந்திருந்த வரலாற்று ஆய்வாளர் திரு.வேல்கடம்பன் அவர் கள் வெளியீடு செய்து வெளியீட்டுரையினையும் நிகழ்த்திய தோடு, நூல் விமர்சனத்தை ஊடகவியலாளர் திரு.கு.கிலசன் அவர்களும் நிகழ்த்த ஏற்புரையினை நூலாசிரியர் திரு. தாமோதரம் பிரதீவன் அவர்களும் நிகழ்த்தி நூற் பிரதிகளும் வழங்கப்படு அதிதிகளின் உரைகளும், கலை நிகழ்வுகள் இடம்பெற்று சிறப்பாக இடம்பெற்றது இந்த வரலாற்று ஆய்வு நூல் வெளியீடு.

விஷேடமாக ஐக்கிய இராஜ்ஜியத்தின் ILC மற்றும் இலக்கு ஊடகங்களின் நிருவாகிகள்,நேயர்களின் பங்களிப்புடன்தான் இந்நிகழ்வு இடம்பெற்றதும் குறிப்பிட வேண்டும்.

இப்படைப்பின் நோக்கம் யாரையும் குறை கூறுவதோ,குற்றப்படுத்துவதோ அன்றி நடந்தவற்றையும், வரலாற்றையும் வெளிப்படுத்தும் படைப்பாக அனை வருக்கும் பயனுள்ளதாகவும் அமைய வேண்டும் என் பதற்காகவுமே எழுதியுள்ளேன் எனவும் குறிப்பிட்டுள்ள நூலாசிரியர் இறுதியாக

“மனிதர்களை மனிதர்களாக மதித்து அவர்தம் உரிமைகள் காத்து பல்லுயிர் ஓம்பி வாழ்வோம்” என முடித் துள்ளார்.

• • •

## கடந்த ஆண்டை ... தொடர்ச்சி...

திருகோணமலை மாவட்ட குச்சவெளி பகுதியில் நகர பிரதேசங்களை உள்ளடக்கிய வகையில் தொல்பொருள் பகுதி என பதாகைகள் இடப்பட்டுள்ளது.

இதனை தொல்பொருள் திணைக்களம் மக்கள் நிலங்களில்அத்துமீறி அடாத்தாக செய்துள்ளது.இது போன்று கடந்த நவம்பர் 05க்கு முன்னர் மட்டக்களப்பு வாழைச்சேனை பகுதியில் இவ்வாறான சம்பவம் பதிவாகி யது.

தமிழ் ,முஸ்லீம் சமூகம் வாழக் கூடிய பகுதிகளை இலக்காக கொண்டு காணிகளை எந்த அரசாங்கமாயினும் கையகப் படுத்துகின்றனர். தற்போதைய அரசின் கட்டமைப்பு எவ்வாறு அமையப்போகிறது சிறுபான்மை சமூகத்தின் அபிலாசைகளை வென்றெடுக்கப்போகின்ற நிலை கேள்விக்குறியாக உள்ளது.எனவே தான் ஊடகங்களில் கூறப்படும் விடயங்கள் மக்களுக்கு தெளிவின்மை ஆகவுள்ளது. இது போன்று பயங்கரவாத தடுப்பு சட்டம் புதிய பரிணாமத்தில் உருவாக்க முயற்சிக்கின்றனர். இது சிறுபான்மை சமூகத்துக்கு பாரிய பாதக விளைவுகளை கூட கொண்டு வரலாம்” எனத் தெரிவித்தார்.

நில உரிமையை பாதுகாப்பது ஒரு மனித உரிமையாக காணப்படுகிறது. ஆனால் கடந்தகால வர லாறுகள் தமிழ் ஈழத்தில் உள்ள மக்களை வீதிக்கு இறக் கியுள்ளது. உரிமைகளை வெற்றி கொள்ளவும் இன மதங் களை பாதுகாக்கவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், வெளிப்படையான மற்றும் நீதியான நடவடிக் கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்பதை தமிழ் பேசும் சமூகம் எதிர்பார்க்கின்றது.

இவ்வாறான பல காரணங்களால் வடகிழக்கு மக்களின் வாழ்வாதாரம் நேரடியாக பாதிக்கப்படுகின் றன. திருகோணமலை கடற்கரையில் புத்தர் சிலை விவ காரம், தையிட்டி விகாரை விவகாரம் என நில அபகரிப்பின் மீதான தாக்கம் பௌத்த மயமாக் கலை முன்னிறுத்தி காவல்துறையினரின் பாதுகாப்புடன் அடாவடித்தனமும் அட்டூழியங்டளும் அரங்கேற்றப்படு கிறது.

இதன் மூலம் விவசாய துறையை பார்க்கின்ற போது தலைமுறைகள் கடந்து பயிரிடப்பட்ட வயல்கள் இன்று வேலி போடப்பட்டு, “அரச நிலம்” அல்லது “பாது காப்பு வலயம்” என அறிவிக்கப்படுகின்றன.

நிலம் இழந்த குடும்பங்கள் தொழிலிழப்புக்கும் வறுமைக்கும் தள்ளப்படுகின்றனர். இளைஞர்கள் வேலை வாய்ப்பின்றி நகரங்களுக்கோ வெளிநாடுகளுக்கோ செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகிறது. இதனால் சமூக கட்டமைப்பு மெதுவாக சிதைவடைகிறது.

நில உரிமை மறுக்கப்படுவது ஒரு சமூகத்தின் எதிர்காலத்தை மறுப்பதற்கு சமம். நில ஆக்கிரமிப்பை நிறுத்தி, உரிய உரிமையாளர்களுக்கு நிலங்களை மீள வழங்குவது நிலையான சமாதானத்திற்கான அடிப்படை ஆகும்.

அபிவிருத்தி என்ற பெயரில் நில அபகரிப்பு அபிவிருத்தி என்பது மக்களின் வாழ்க்கையை மேம் படுத்துவதற்காக இருக்க வேண்டுமே தவிர, அவர்களை நிலமற்றவர்களாக்குவதற்காக அல்ல. ஆனால் வடகிழக் கில் பல இடங்களில் அபிவிருத்தி திட்டங்கள் என்ற பெயரில் மக்கள் தங்கள் சொந்த நிலங்களில் இருந்து வெளியேற்றப்படுகின்றனர்.

மக்களுடைய ஆலோசனைகள் இன்றி முன் னெடுக்கப்படும் திட்டங்கள் எதிர்ப்பையும் நம்பிக்கையின் மையையும் உருவாக்குகின்றன. பாடசாலைகள், மருத்து வமனைகள், வீடுகள் போன்ற அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில், பிரம்மாண்டமான சட்டவிரோத கட்டுமானங்கள் முன்னுரிமை பெறுவது கேள்விக்குறியாக உள்ளது.

அபிவிருத்தி மனிதநேயத்துடன் இருக்க வேண் டும். நில உரிமைகளை மதித்து, மக்களின் ஒப்புதலுடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தியே உண்மையான முன்னேற்றமாகும். கடந்த காலத்தில் இடம் பெற்ற கசப்பான விடயங்கள் புதிய ஆண்டிலும் இடம் பெறக்கூடாது என்பதை வலியுறுத்திய ஆட்சியை நிலைநிறுத்த வேண்டும்.

நில உரிமையும் நல்லிணக்கமும் நிலப் பிரச் சினை தீர்க்கப்படாமல் நல்லிணக்கம் சாத்தியமில்லை. வடகிழக்கில் நில ஆக்கிரமிப்பு தொடரும் வரை இனங்களுக்கிடையிலான நம்பிக்கை உருவாகாது. நிலம் என்பது ஒரு சமூகத்தின் அடையாளம்,

போருக்குப் பிந்தைய காலத்தில் நிலங்களை உரிய மக்களுக்கு மீள வழங்குவது நல்லிணக்கத்தின் முக்கிய அடையாளமாக இருக்கும். இது நீதி, சமத்துவம் மற்றும் ஜனநாயகத்தின் மீது மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தும். நில உரிமையை உறுதி செய்வது அரசின் கடமையாக இருக்க வேண்டும். நிலங்களை கபளீகரம் செய்ததன் காரணமாக பலர் வாழ்வாதாரங்களை இழந்து நடுத்தெருவில் நிற்கின்றனர்.

• • •







## மக்களுக்கு... தொடர்ச்சி...

இது செனாப் பள்ளத்தாக்கில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளின் பின்னணியில் உள்ளூர் பாதுகாப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண் டது. 17 தொலைதூர கிராமங்களைச் சேர்ந்த சுமார் 150 தன்னார்வலர்கள் (பெண்கள் உட்பட) ஆயுதக் கையாளுதல், தற்காப்பு, பதுங்கு குழி கட்டுமானம் மற்றும் தந்திரோபாயத் திறன்களில் பயிற்சி பெற்று வருகின்றனர், இது ஊடுருவும் பயங்கரவாதிகளுக்கு எதிரான முதல் பாதுகாப்பாக மாறியுள்ளது.

தற்போது VDG-களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, பயங்கரவாதிகளை எதிர்கொள்ள .303 துப்பாக்கிகளுக்குப் பதிலாக தானியங்கி தாக்குதல் துப்பாக்கிகள் வழங்கப்படுகின்றன. எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு அருகே எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை எதிர் கொள்ள ஆயுதங்கள், தற்காப்புத் திறன்கள் மற்றும் பதுங்கு குழி பயிற்சியுடன் உள்ளூர்வாசிகள் தயார் படுத்தப்படுகின்றனர்.

ஆனால் 1990களில், தோடாவின் VDC ஆயுதக் குழுக்களுக்கு மிகவும் சவால்விடும் பொதுமக்கள் படை யாக சிறந்த பயிற்சி மற்றும் நவீன ஆயுதங்களுடன் மக்கள் இருந்தனர். ஆயுத மேம்பாடுகளுடன் (SLR ரைபிள்கள்) இணைந்து, இந்த முயற்சி நம்பிக்கையை அதிகரிக்கிறது மற்றும் கிராம மட்டத்தில் பல அடுக்கு பாதுகாப்பை உறுதி செய்கிறது.உள்ளூர் மக்கள் முதல் பாதுகாப்பு வரிசையாக மாறும்போது, எதிரிக்கு ஒளிந்து கொள்ள எங்கும் இடம் இல்லை என இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**2025ம் ஆண்டில் ... தொடர்ச்சி...**

## 3. இஸ்ரேலும் அமெரிக்காவும் ஈரானின் அணு வாயுதத் தொகுதியின் மேல் தாக்குதலை மேற் கொண்டுள்ளது.

சில போர்கள் வருடக்கணக்கில் நடை பெறு கின்றன. சில போர்கள் நாட்கணக்கில் நடைபெறுகின்றன. ஜூன் மாதத்தில் இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையே நடைபெற்ற போர் இரண்டாவது வகையைச் சார்ந்தது. 12 நாட்போர் என்று இப்போது அது அழைக்கப்படுகிறது. இப்போருக்கான தயாரிப்பு பல வருடங்களாக மேற் கொள்ளப்பட்டது. ஈரானின் அணுவாயுத ஆற்றலையும் மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கு எதிரான போராளிகளுக்கு அது வழங்கும் ஆதரவையும் தனக்கான அச்சுறுத்தலாகவே இஸ்ரேல் பார்த்தது.

2023ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 7ம் திகதி ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதலுக்குப் பின்னர் லெப னான், ஈராக், சிரியா, யேமன் போன்ற நாடுகளில் உள்ள ஈரானின் சகவாளர்களை இஸ்ரேல் தாக்கியது. இவ்வாறான தாக்குதல்களின் காரணமாக எதிர்ப்பு அச்சை ஈரான் பயன்படுத்த முடியாதவாறு இஸ்ரேல் தடுத்தது. 2024 ஒக்ரோபரில் இஸ்ரேல் மேற்கொண்ட விமானத் தாக்குதல் கள் ஈரானின் ஏவுகணை ஆற்றல்களை கடுமையாகத் தாக்கியதுடன் அதன் வான்வெளிப் பாதுகாப்பையும் அழித் தது.

2025 ஜூன் மாதத்தில் சில அடிப்படையான அணுவாயுதங்களைத் தயாரிக்கக்கூடிய நிலைக்கு ஈரான் முன்னேறியிருந்தது. இஸ்ரேல் மேற்கொண்ட "ஒபறேஷன் றைசிங் லயன்" என்ற தாக்குதல் ஈரானின் அணுவாயுதங்கள் மீதும் மற்றும் பாலிஸ்ரிக் ஏவுகணைகள் மீதும் தாக்குதலை மேற்கொண்டிருந்தது. அதுமட்டுமன்றி இராணுவத் தளங்களைத் தாக்கியதுடன் அரசியல் தலை வர்கள், இராணுவத் தலைவர்கள், அணுவாயுத விஞ் ஞானிகள் போன்றவர்களையும் கொலைசெய்தார்கள். இவ்வாறான தாக்குதல்களுக்குப் பதிலடியாக ஆளில்லா விமானத் தாக்குதல்களை ஈரான் இஸ்ரேல் மேல் தொடுத்தது. அமெரிக்காவின் உதவியுடன் பெரும்பாலான ஆளில்லா விமானங்களை இஸ்ரேல் தாக்கியழித்தது.

பின்னர் ஒபறேஷன் மிட்நைற் ஹமர் என்ற பெயரில் ஜூன் 22ம் திகதி அமெரிக்காவிலன் பி2 குண்டு வீச்சு விமானங்களும் ரொமஹோக் ஏவுகணைகளும் ஈரானின் அணுவாயுதத் தொகுதிகளைத் தாக்கின. இவ் வாறான தாக்குதல்கள் ஈரானின் அணுவாயுத ஆற்றலை முற்றாக அழித்ததாக ட்ரம்ப் மார்தட்டிப்பேசினார். ஆனால் குண்டுகள் விழுவதற்கு முன்னரேயே தனது யுரேனியத்தை ஈரான் அங்கிருந்து அகற்றியிருந்தது. ஜூன் 24ம் திகதி இஸ்ரேலும் ஈரானும் ஒரு போர்நிறுத்தத்துக்கு உடன்பட்டன. இதன் காரணமாக போர் முடிவுக்கு வந்தது.

## 2. அரிய நிலக் கனிம வளங்களை ஆயுத மாக்கிய சீனா

அமெரிக்காவுக்கு ஈடான ஒரு வல்லரசாக, சீனா தன்னை நிலைநிறுத்திக் கொண்ட ஓர் ஆண்டாக எதிர்கால வரலாற்று ஆசிரியர்கள் 2025க் குறிப்பிடுவார்கள். பல தசாப்தங்களாக தனது வெளிநாட்டுக் கொள்கை இலக்குகளை அடைவதற்கு தனது பொருண்மிய ஆதிக்கத்தை குறிப்பாக தனது நிதியை அமெரிக்கா பயன்படுத்தி வந்தது. 2025 ஏப்பிரலிலும் பின்னர் ஒக்ரோபரிலும் தனது பொருண்மிய வளர்ச்சியை ஆயுதமாக்க முடியும் என்பதை பேஜிங் நிரூபித்துக்காட்டியது. பல கைத்தொழில்கள் மற்றும் இராணுவத் தேவைகளுக்கு பயன்படக்கூடிய அரிய வகையான நிலக்கனிமங்களை சீனா இதற்காகப் பயன்படுத்தியது. இந்தக் கனிம வளங்களில் ஆதிக்கத்தை செலுத்துவதற்காக பல ஆண்டுகளாக சீனா உழைத்து வந்தது. உலகளாவிய ரீதியில் கனிம வளங்களை அகழ்வதில் 60 வீதத்தையும், அந்தக் கனிமங்களைப் சுத்திகரிக்கும் செயற்பாட்டின் 90 வீதத்தையும் சீனா தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.

கனிம வளங்கள் தொடர்பாக தனக்குள்ள ஆதிக் கத்தை ஆயுதமாக்கும் சீனாவின் அணுகுமுறை ஒன்றும் புதிதல்ல. செங்காக்கு தீவுகள் தொடர்பாக யப்பானுடன் ஏற்பட்ட ஒரு பிரதேச ரீதியிலான முரண்பாட்டைத் தொடர்ந்து, யப்பானுக்கு மேற்கொள்ளும் அரிய கனிமவள ஏற்றுமதியை 2010 இல் சீனா தடுத்து நிறுத்தியது, ஏற்கனவே இது தொடர்பாக எச்சரிக்கப்பட்ட போதிலும் அமெரிக்கா தன்னைப் பாதுகாக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சீனா ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கான வரியை ஏப்பிரலில் அதிபர் ட்ரம்ப் உயர்த்திய பொழுது, காந்தத்தையும் ஏனைய ஏழு கனிம வளங்களையும் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்வதை சீனா நிறுத்தியிருந்தது. ஒரு மாதத்துக்குள் ட்ரம்ப் தனது வரிகளை முன்னர் இருந்த நிலைக்குக் குறைத்தார். ஒக்ரோபரில் 'உயர்ரக செமிகொண்டாக்ரர் சிப்" களையும் அவற்றின் தொழில்நுட்ப ஏற்றுமதிக்குமான வரிகளை சீனாவுக்கு ட்ரம்ப உயர்த்திய பொழுது, சீனாவிலிருந்து பெறப்படும் அரிய கனிம வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான வரியை சீனா அதிகரித்தது.

இவ்வாறான செயற்பாடுகள் அமெரிக்கப் பொருண்மியத்தில் ஏற்படுத்திய தாக்கத்தின் காரணமாக, ஏற்றுமதி தொடர்பாக தான் அறிமுகப்படுத்திய பல கட்டுப் பாடுகளை அமுல்நடத்துவதை ட்ரம்ப் தள்ளிவைத்தது மட்டுமன்றி, சீனாவுக்கு எதிராக முன்னெடுத்த மேலும் பல நடவடிக்கைகளையும் கைவிட்டார். இதற்குப் பதிலாக பேஜிங்கும் ஒக்ரோபர் மாதம் தாம் அறிமுகப்படுத்திய ஒழுங்குவிதிகளை அமுல்நடத்துவதை ஒரு வருடத்துக்குத் தள்ளிப்போட்டது. இவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது, அரிய கனிமவளங்கள் தொடர்பான பிரச்சினை அமெரிக் காவை இன்னும் அச்சுறுத்திக்கொண்டு தான் இருக்கிறது.

## 1. அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையைக் குழப்பியடிக்கும் ட்ரம்ப்

சொன்ன சொல்லுக்குச் செயல் வடிவம் கொடுப்பது எப்போதும் நல்ல விடயமா? அமெரிக்க வெளியுறவுக் கொள்கையை தான் மீள்பரிசீலனை செய்யவிருப்பதாக 2024இல் டொனால்ட் ட்ரம்ப் சூளுரைத்திருந்தார். "கொடுக் கப்பட்ட வாக்குறுதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின் றன" என்று இப்போது அவரால் சொல்ல முடியும். "கிறீன் லாந்தை அமெரிக்காவுக்குச் சொந்தமாக்க வேண்டும்", "கனடாவை அமெரிக்காவின் 51வது மாகாணமாக்க வேண்டும்", "பனாமாக் கால்வாய் தொடர்பாக தமது ஆதிக்கத்தை மீள நிலைநாட்ட வேண்டும்" என்று சொன்ன பொழுதே வெளியுறவுக் கொள்கையை ட்ரம்ப் குழப்பத் தொடங்கிவிட்டார்.

இரண்டாவது தடவையாகத் தான் அதிபராகப் பதவியேற்ற பொழுது பாரிஸ் ஒப்பந்தம், உலக சுகாதார தாபனம், ஆகியவற்றிலிருந்து ட்ரம்ப் வெளியேறியதுடன், அகதிகளை மீண்டும் அனுமதிப்பதில் கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்தது மட்டுமன்றி, போதைப் பொருள் கடத்துபவர்களை வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்பு களாகச் சித்தரித்தார். பதவியேற்ற முதல் மாதத்திலேயே பன்னாட்டு அபிவிருத்திக்கான அமெரிக்க தாபனத்தை படிப்படியாக மூடத் தொடங்கியதோடு கூட்டாட்சி அரசுக்குச் சொந்தமான பல தனிப்பட்ட பிரிவுகளின் சுயாதீனத் தன்மையை முடிவுக்குக் கொண்டுவந்தார். அது மட்டுமன்றி, அந்த அமைப்புகளில் பணியாற்றியோருக்கான சம்பளத்தை யும் நிறுத்தினார்.

ஏப்பிரல் மாதம் 2ம் திகதி, விடுதலை நாள் என்று ஒன்றை நிறுவி, பல பொருட்கள் மேல் வரிகளை அதி கரித்ததோடு சில குறிப்பிட்ட நாடுகளுக்கு 50 வீது வரி அதிகரிப்பை அறிவித்திருந்தார். நேட்டோ நாடுகள் தமது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5 வீதத்தை பாதுகாப்புக்கு ஒதுக்குவதற்கும் வெளிநாடுகளில் நடைபெற்று வந்த எட்டுப் போர்களைத் நிறுத்தியதறகும் உரிமை கோரினார். உக்ரேன் போரை முடிவுக்குக் கொண்டுவருவதில் அவர் தோல்வியைத் தழுவினார். அத்துடன் வெனிசுவேலா ஆட்சியை மாற்ற அழுத்தம் கொடுத்தார். "தேசிய பாதுகாப்பு மூலோபாயத்தை" இம்மாதத் தொடக்கத்தில் ட்ரம்ப் அறிவித்தார்.

அவரது நடவடிக்கைகளுக்கான தர்க்கவியல் காரணத்தை அது விளக்கியது. ட்ரம்பின் அணுகுமுறையில் உள்ள பல தவறுகளை அவரது விமர்சகர்கள் சுட்டிக்காட்டினார்கள். அவர் அறிமுகப்படுத்திய வரிகள் அமெரிக்க நுகர்வோரையும் உற்பத்திகளையும் கணிசமான அளவு பாதித்திருக்கின்றன. உக்ரேன் தொடர்பாக ட்ரம்ப் முன்வைத்த அமைதித்திட்டம் உக்ரேனை ஆக்கிரமித் ததற்கான வெகுமதியாக அமைந்தது. தான் தீர்த்து வைத்துவிட்டேன் என்று ட்ரம்ப் மார்தட்டிய முரண்பாடுகள் பல இன்னும் தொடர்ந்துகொண்டு தான் இருக்கின்றன. தேசிய பாதுகாப்புக் கட்டமைப்பில் பணியாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்தது அமெரிக்க அரசைக் கடுமையாகப் பலவீனப்படுத்தியிருக்கிறது. ஒரு விடயம் மட்டும் மிகவும் தெளிவாகியிருக்கிறது. அமெரிக்க அமைதிக் காலத்துக்கு ட்ரம்ப் முடிவுரை எழுதிவிட்டார். "எம்மிடம் இருக்கும் ஒன்றை நாம் இழந்துவிடும் பொழுது தான் அதன் பெறுமதியை நாங்கள் புரிந்துகொள்கிறோம்" என்ற ஜொணி மிச்செல்லின் கூற்றின் பொருளை இப்போது தான் நாம் தெளிவாகப் புரிந்துகொள்கிறோம்.

**நன்றி; cfr.org**







இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



# தாயகமும் வாழ்வும்



